# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku2009@gmail.com | www.facebook.com/ilakkutamilnews | https://twitter.com/Ilakku1

இதழ் 256 | சனி, அக்டோபர் 14, 2023 | 16 பக்கங்கள்




அரியநேத்திரன் செவ்வி

## பேரவலத்தை மட்டக்களப்பு எதிர்கொள்ளப்போகின்றது

## மேய்ச்சல் தரையும்... பண்ணையாளர்களும்





சசி புண்ணியமூர்த்தி



## இஸ்ரேலின் கற்பனைக்கு அப்பால்

## ஹமாஸ் போராளிகள் தங்களை விருத்தி செய்தார்களா?

தமிழில்: ஜெயந்திரன்




© 2023 இலக்கு இணையம்

# கடும் இராஜதந்திர நெருக்கடிகளுக்கு பின்னர் இலங்கை வந்த ஜெய்சங்கர்



கடந்த புதன்கிழமை (11) இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை வரவேற்பதற்காக இலங்கை அரசு தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகிய உயர்கல்வி அமைச்சரை அனுப்பியது இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகல் நிலை அதிகமாகி வருவதை காண்பிப்பதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் வளை கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்திய அமைச்சர் இலங்கை வந்துள்ளார். அவரை இலங்கை உயர்கல்வி அமைச்சர் சுரேன்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# இந்தியா மேற்கொண்ட இனப்படுகொலையின் 36-வது நினைவேந்தல்



கொக்குவில் பிரம்படி பகுதியில் இந்திய இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை நினைவேந்தல் கடந்த வியாழக்கிழமை(12) காலை 9மணிக்கு பிரம்படி நினைவு தூபியில் அனுஸ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களை தொடர்ந்து இலங்கை இந்திய உடன்பாட்டின் அடிப்படையில் அமைதிகாக்க

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கைக்கு இரண்டாம் கட்ட நிதியை வழுங்க ஐ.எம்.எப் திட்டம்

இந்த வாரம் மொறோக்கோவில் இடம்பெற்ற பேச்சக்களை தொடர்ந்து இலங்கைக்கு இரண்டாவது கட்ட நிதியான 334 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அனைத்துலக நாணய நிதியம் முன்வந்துள்ளது.

இது தொடர்பில் இறுதியான முடிவுகள் எட்டப்படாததால் தனது பெயரை குறிப்பிடவேண்டாம் என இந்த சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவர் அனைத்துலக ஊடகம் ஒன் றிற்கு தெரிவித்துள்ளார். இன்னும் சில விடையங்களில் இணக்கப்பாடுகள்




தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இந்திய வங்கிகளில் இருந்து வாடிக்கையாளர்களின் பணம் அதிகாரிகளால் திருட்டு

பரோடா என்ற இந்திய வங்கியில் இருந்து வாடிக்கையாளர்களின் பெரும்தொகை பணத்தை முகவர்கள் திருடியுள்ளது உள்ளக கணக்காய்வின்போது தெரியவந்துள்ளது.




362 பேரின் கணக்குகளில் இருந்து 27,000 அமெரிக்க டொலர்கள் (2.2 மில்லியன் இந்திய ரூபாய்கள்) திருடப்பட்டுள்ளன. வங்கி வாடிக்கையாளர்களின் கணக்குடன் வேறு நபர்களின் தொலைபேசி இலக்கங்களை இணைத்து வங்கியில் பணிபுரியும் ஊழியர்களின் துணையுடன் இந்த திருட்டுக்கள் நிகழ்ந்துள்ளன.

இணைக்கப்பட்ட இனந்தெரியாத இலக்கங்கள் வங்கி ஊழியர்கள், முகாமையாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், முகவர்கள் மற்றும் அவர்களின்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல் – ஐ.நா பணியாளர்கள் 12 பேர் பலி

ஹமாஸ் படையினர் கடந்த சனிக்கிழமை (07) இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடியாக காசா வின் மக்கள் குடியிருப்புக்கள் மீது இஸ்ரேல் தொடர்ந்து மேற் கொண்டுவரும் தாக்குதல் களினால் இதுவரையில் தமது பணியாளர்கள் 12 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள் ளது.



ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பை சேர்ந்த பணியாளர்களே கொல்லப்பட்டுள்ளனர் என அது மேலும் தெரிவித்துள்ளது. இதனிடையே, ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்கு பழிவாங்கும் முகமாக இஸ்ரேல் பலஸ்தீனமக்களை கூட்டாக தண்டிப்பதாக ஐ.நாவின் சுயாதீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 வருடங்களாக அந்த மக்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றனர். அங்கு 5 இற்கு மேற்பட்ட கொடூரமான போர்கள் நிகழ்ந்துள்ளன. இந்த போர்களில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களுக்கே இன்னும் நீதி கிடைக்கவில்லை.

ஆனால் தற்போது நீர், மின்சாரம் மற்றும் உணவு போன்றவற்றை தடைசெய்து அவர்கள் மீது கடுமையான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டுவருகின்றது. இது மிகவும் கண்டனத்துக்குரியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், கடந்த வியாழக்கிழமை (12) இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் அந்தோனி பிளிங்டன் இஸ்ரேலுடன் அமெரிக்கா எப்போதும் நிற்கும் எனவும், மேலதிக நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஒரு மாதத்திற்குள் 500 பில்லியன் டொலர்களால் உயர்ந்த அமெரிக்காவின் கடன் தொகை

கடந்த 20 நாட்களுக்குள் அமெரிக்காவின் தேசிய கடன் தொகை 500 பில்லியன்களால் உயர்ந்துள்ளதுடன், அதன் மொத்த கடன்தொகை 33.5 றில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளதாக அமெரிக்காவின் திறைசேரி கடந்த வாரம் தெரிவித்துள்ளது.

இது அமெரிக்காவின் கடன் பெறும் எல்லையான 31.4 றில்லியன் டொலர்களை கடந்துள்ளது. நாட்டை நிர்வகிப்பதற்கு அமெரிக்கா வாங்கிய கடன்கள் கடந்த மாதம் 18 ஆம் நாளின்போது 33.04 றில்லியன் டொலர்களாக உயர்ந்திருந்தது.

32 றில்லியன் டொலர்களில் இருந்து 33.04 றில்லியன் டொலர்



களாக கடந்த 3 மாதங்களில் அது உயர்ந்திருந்தது. ஆனால் அது தற்போது 33.5 றில்லியனாக 20 நாட்களில் உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் கடன் பெறும் எல்லையான 31.4 றில்லியன் டொலர்களை அது கடந்த ஜனவரி மாதமே கடந் திருந்தது. அமெரிக்காவின் மொத்த

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஐ.நாவை வெளியேறுமாறு ஆபிரிக்க நாடு உத்தரவு



நைகர் நாட்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியை 72 மணி நேரத்திற்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு அந்த நாட்டின் அரசு உத்தரவிட்டுள்ளது.

நைகருக்கான ஐ.நா பிரதிநிதி லூயிஸ் ஆர்பின் தமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும், நைகர் நாடு தொடர்பில் அனைத்துலக மட்டத்தில் தவறான தகவல்களை பரப்புவதாகவும் நைகர் அரசு கடந்த செவ்வாய்கிழமை (10) தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச்சபை அமர்வில் நைகர் நாடு கலந்துகொள்வதை அவர் தடுத்துள்ளார். பிரான்ஸின் அழுத்தங்கள் காரணமாக அவர் இதனை மேற்கொண்டுள்ளார். வியன்னாவில் கடந்த மாதம் இடம்பெற்ற அனைத்துலக அணுசக்தி மாநாட்டில் நைகர் கலந்துகொள்வதையும், சவுதி அரேபியாவில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 2023




*“தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 2023” கனடாத் தமிழ் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டிலும் கனடாத் தமிழ் கலைபண்பாடுக் கழகத்தாலும் ஒக்டோபர் 10, 2023 அன்று மாலை இடம் பெற்றது.*



முதற் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி நினை வாகவும், தீருவில் தியான பன்னிரு வேங்கைகள் நினை வாகவும் இவ் எழுச்சி நிகழ்வு ஸ்காபுரோவில் இடம் பெற்றது.



*மலர் தூவி வணங்கினர் மக்கள்.*
*பா தூவிப் பாடினர் இசைக் கலைஞர்கள்.*
*மாவீரர் புகழ் பாடல்களுற்கு எழுச்சி நடனம் வழங்கினர் ஆடல் கலைஞர்கள்.*
*36 ஆண்டுகளானாலும்...*





*இனியும் எத்தனை ஆண்டுகளானாலும் வல்லமை தரும் மாவீரம் உணர்வுள்ள தமிழ் மாந்தரை வழி நடத்தி எழுகை வரலாற்றைப் படைக்க வைக்கும் என்பதனையே இவ் எழுச்சி நிகழ்வுகள் எடுத்தியம் புகின்றன.*

***தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!***

ஆசிரியர் தலையங்கம்

இலக்கு

## ஈழத்தமிழரின் இறைமை மறுப்பு மூலம் சிறிலங்கா இஸ்ரேயல் போல செயற்படாது தடுக்க ஐ.நா. சிறப்பு பிரதிநிதி உரிமை உடன் தேவை

ஈழத்தமிழர்களையும் பலஸ்தீனிய மக்களையும் பொறுத்த மட்டில் தனியான தேச இனங்களாகப் பிரித்தானிய காலனித்துவ அரசால் கைப்பற்றப்பட்ட இவர்களின் இறைமையுள்ள நிலப்பரப்புக்களை காலனித்துவ பிரித்தானிய ஆட்சியாளர்கள் ஒரு அரசுக்குள் இரு நாடுகள் என்ற நிலையில் சுதந்திரம் கொடுத்துச் சென்றதால் இனஅழிப்புக்கு உள்ளாகும் நாளாந்த வாழ்வை அனுபவிக்கின்ற மக்களாக இன்றைய உலகில் துன்பவாழ்வ வாழ்கின்றனர். ஈழத்தமிழர்களதும் பலஸ்தீனியர்களதும் தேசியப் பிரச்சினைகளைப் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் உரிய முறையில் தீர்த்து வைக்காது விட்டு விலகிய நிலையில் காலனித்துவப் பிரச்சினைகளாக ஐக்கிய நாடுகள் சபையும் சரியான முறையில் இதனை தீர்க்காது காலதாமதம் செய்வதால், இன்று உலகப்போர்கள் இப்பகுதிகளில் தோன்றக் கூடிய அனைத்துலகப் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் ஊறுவிளைக்கும் நிலை வேகப்பட்டு வருகிறது.

இவர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் இவர்களின் இறைமைகளை ஏற்க ஐக்கியநாடுகள் சபை மறுத்து வருவதால் இவர்களை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு செய்து இவர்களின் இறைமையை இவர்கள் மீளவும் நிலைநாட்டாதவாறு இவர்களை ஆளும் ஆட்சியாளர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பாதிப்புற்ற நிலையில் உள்ள இம் மக்களை, ஆளும் அரசாங்கத்தினர் தொடர்ச்சியாக இனஅழிப்பு செய்து அவர்களை நிரந்தர அடிமையாக்குவதைத் தங்களின் அரசியல் கொள்கையாகவும் அரசியற் செயற்திட்டமாகவும் இனஅழிப்பை கோட்பாடாக்கிச், செயற்பட்டு வருகின்றனர். இதுவே 17.05. 2009 இல் இலங்கையின் முள்ளிவாய்க்காலில் 176000 ஈழத்தமிழர்களை ஒரு தேசமாகவே சிறிலங்கா இனஅழிப்பு செய்யவும், இன்று பலஸ்தீனியத்தின் காசா நீள்கரைத் தேசத்தில் 500 சிறுவர்கள் உட்பட 1537 பலஸ்தீனியர்களை ஒரு தேசமாகவே இஸ்ரேயல் இனஅழிப்புக்குள்ளாக்கவும் காரணமாகின்றது.

இன்றையப் போர்ச் சூழலுக்கு ‘கமாஸ்’ பலஸ்தீனிய ஆயுதப்போராளிகள் இஸ்ரேயல் மக்களின் மேல் திடீரென நடாத்திய தாக்குதல்களால் 1300 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதே தொடக்கக் காரணமாக அமைவதால் உலகநாடுகளில் இந்தியா உட்பட மேற்குலகநாடுகள் இஸ்ரேலிய அரசுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல் எனத் தங்களின் ஆதரவை இஸ்ரேலிய அரசுக்கே தொடர்ந்து தெரிவித்து தங்களாலான உதவிகளைச் செய்து வருகின்றனர். உலகின் கவனம் காசாவில் இருக்கையில் ஈழத்தமிழின அழிப்பை பலவழிகளில் முன்னெடுக்க சிறிலங்கா திட்டமிடலாம் என்னும் அச்சம் ஈழத்தமிழர்களிடை பலமாக உள்ளது. உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் கூட்டொருங்குச் செயற்பாடுகள் மூலம் ஈழத்தமிழர்கள் இந்தக்காலக்கட்டத்தில் பாதுகாப்பாக வாழ்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நேரமிது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

மேலும் ஒருவகையில் மேற்குலக - இந்திய இஸ்ரேலுக்கான ஆதரவு அனைத்துலக அரசியல் ஒழுங்கு முறையைப் பேணுவதற்கான அவற்றின் செயற்பாடு என்று இந்த நாடுகள் நியாயப்படுத்துமானால் யுத்தச் சட்டங்கள் இன்று என்னவாகிறது? அவை எந்த அளவுக்கு பலஸ்தீனியரைத் தங்களின் குடிமைசார் மக்கள் என ஆட்சிப்படுத்தும் இஸ்ரேயலால் ஏன் பின்பற்றப்படாது விடப்படுகிறது? என்பதை நடுநிலையில் நின்று ஒழுங்குபடுத்த வேண்டியது இந்த நாடுகளின் அனைத்துலகச் சட்ட நடைமுறைப்படுத்தல் கடமையாகவுள்ளது என்பதை இலக்கு வலியுறுத்திக்கூற விரும்புகிறது.

எந்த யுத்தத்திலும் யார் யுத்தத்தில் ஈடுபட்டாலும் அது அரசாக இருந்தாலும் சரி எந்தப் பங்குபற்றுபவர்களானாலும் சரி "குடிமைசார் மக்கள் (சிவிலியன்கள்) இலக்காக்கப்படக் கூடாது" என்பது அனைத்துலக மனிதநேயச் சட்டக் கோட்பாடாக ‘jus in bello’ என்னும் யுத்தத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கான சட்ட விளக்கமாக 1949ம் ஆண்டு ஜெனிவா மரபுசாசனத்திலும் 1977ம் ஆண்டு மரபுச் சீர்முறைமையிலும் உள்ளது. தற்செயலாகக் கூடக் குடிமைசார் மக்களுக்கு உயிரிழப்போ, காயங்களோ, உடைமைகளுக்கோ பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கெனக் கண்டால் அந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்படக்கூடாது என்பதும் அப்படிச் செய்தால் அது சட்டத்தால் யுத்தக் குற்றமாகவும் மனிதாயத்துக்கு எதிரான குற்றமாகவும் இனவழிப்பாகவும் குற்றத்தன்மைக்கு ஏற்ப அமையுமென வரைபு செய்யப்பட்டுளள்து.

பலஸ்தீனியப் போராட்டக்குழு கமாஸ் இஸ்ரேயலைத் தாக்கி இன்றைய சூழ்நிலை தோன்றியது என இஸ்ரேயல் கூறினாலும் பலஸ்தீனிய மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கம் தாங்களும் கமாசும் ஒனறல்லவென தன் பேச்சாளர் மூலம் தெரிவித்துள்ளது. எனவே கமாசை அழிப்பதாக இஸ்ரேயல் பலஸ்தீனிய மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கத்தையும் செயற்படாதவாறு தடுப்பது ஐ.நா.வால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. மேலும் நாட்டின் அரசாங்கமாகவுள்ள இஸ்ரேயல். தனது குடிமை சார் மக்கள் (சிவிலியன் ) ஆகிய பலஸ்தீனியர்களின் உணவு உடை தண்ணீர் மருந்துகள் ஆடைகள் பாதுகாப்பாகத் தங்குவதற்கான இடங்கள் என்பவற்றின் வழங்கல் காசாவில் எவ்விதத்திலும் பாதிப்புறாதவாறு பேணிய நிலையிலேயே அரசுக்கு எதிராகப் போராடுபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அனைத்துலகச் சட்டக் கடமையுள்ளதாக உள்ளது. அதனை இஸ்ரேயல் இன்று செய்யத் தவறுவதற்கு முன்னுதாரணமாகச் சிறிலங்காவின் 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின இனஅழிப்பு உள்ளது. இதற்குச் சாட்சியங்கள் நிறைய இருந்தும், யுத்தகாலத்திலும் சரி, அதற்குப் பின்னரும் சரி இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத ஐக்கிய நாடுகள் சபையினதும் அனைத்துலக நாடுகளினதும் திட்டமிட்ட காலதாமதங்களும் ஊக்குவிப்புக் காரணிகளாக உள்ளது என்பதை உலகுக்கு இவ்வேளையில் சுட்டிக்காட்ட இலக்கு விரும்புகிறது.

சமகாலப்பிரச்சினை குறித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக் கொள்கைத் தலைமைப் பொறுப்பாளர் யோசப் போரல் ( Joseph Borell) தெரிவித்துள்ள கருத்து முக்கியமானது. "இஸ்ரேயலுக்கு தன்னைப் பாதுகாக்க எந்த அளவுக்கு உரிமையிருக்கிறதோ அந்த அளவுக்கு அனைத்துலக சட்டங்களையும் அனைத்துலக மனிதாயச் சட்டங்களையும் பின்பற்றவும் கடமையுண்டு" எனக் கூறியுள்ளார். ஆனால் இந்த மாதிரியான நாட்டின் குடிமைசார் மக்களைப் பாதுகாக்கும் பேச்சுக்கள் எதுவும் ஈழத்தமிழர்களின் மேல் சிறிலங்கா இனஅழிப்பினை நடத்தும் பொழுது ஐரோப்பாவில் குறிப்பிடத்தக்க அளவு ஈழத்தமிழர்கள் வாழ்கின்ற நிலையிலும் ஏன் பேசப்படவில்லை என்பது சிந்தனைக்குரிய கேள்வியாக உள்ளது. ஈழத்தமிழர்கள் கூட்டொருங்கு செயற்பாட்டாளர்களாக மாற வேண்டிய அவசியத்தை இது மீளவும் உணர்த்துகிறது.

பலஸ்தீனிய மக்களுக்கு வாக்களிக்கும் உரிமையற்ற சிறப்புப் பிரதிநிதித்துவ உறுப்புரிமையை ஐக்கிய நாடுகள் சபை அளித்துள்ளதால் அவர்களால் இன்று நடப்பதுபோன்ற பிரச்சினைகள் நடைபெறுகையில் அதனை ஐக்கியநாடுகள் சபையில் வெளிப்படுத்த முடிகிறது. ஆனால் ஈழத்தமிழர்களுக்கு இந்த சிறப்புப் பிரதிநிதித்துவமும் கூட இல்லாத நிலையில் அவர்களின் நிலையை ஐக்கிய நாடுகள் சபையிலும் வெளிப்படுத்த இயலாதநிலை தொடர்கிறது. இதனைப் பலஸ்தீனிய இன்றைய பிரச்சினையின் பின்னணியில் உலகுக்கு வெளிப்படுத்தி ஈழத்தமிழரின் இறைமை மறுப்பு மூலம் சிறிலங்கா இஸ்ரேயல் போல செயற்படாது தடுக்க ஐ.நா. சிறப்பு பிரதிநிதி உரிமை உடன் தேவை என்பதைத் தாயகத்திலும் உலகிலும் ஈழத்தமிழர்கள் கூட்டொருங்குச் செயற்பாட்டின் மூலம் முன்னெடுக்க வேண்டுமென்பது இலக்கின் இவ்வார எண்ணமாக உள்ளது.

**ஆசிரியர்**



# ‘ஒரிசா பாலு’ எம் வரலாற்றின் உயிர்க்குரல் ‘ஒரிசா பாலு’ எமது இன மீட்பின் செயற்குரல்

தமிழர் தொன்மையைத்
தரணிக்கு உணர்த்திடும்
தரவுகள் சான்றுகள்
திரட்டித் தொகுக்கவும்..
குமரிக்கண்டத்திற்
குடிகொண்ட தேசத்தின்
உண்மை வரலாற்றை
உளிகொண்டு செதுக்கவும்.,
இமயப் படுக்கையின்
இடமும் வலமும்
இப்பூகோள
வடக்கும் தெற்கும்
அமையப் பெற்ற
அத்தனை திசையிலும்
அடிவைத்திட்ட
தமிழரை அணைக்கவும்..
இமைகள் மூடாது
இயங்கிய பெருமகன்
உறங்கிய செய்தியால்
உள்ளம் தீய்ந்ததே!

கடல்வழி உலகக்
கண்டங்கள் யாவும்
கப்பலில் வணிகம்
கட்டடக் கலை போர்
வெற்றிகள் எனவே
தொடர்புகள் கொண்ட
தொல்குடி மரபைத்
திடமுடன் நிறுவித்
தெளிவுற உரைத்த ‘நா’
தேய்ந்து சுருண்டின்று
திறன் விட்டுப் போனதே!

தமிழர் தேசியத்
தகைமைகள் உரைக்கவும்
தமிழைத் தூசிக்கும்
பகைமையைக் கரைக்கவும்
நிமிர்ந்த நெஞ்சுடன்
நீதியைக் கூறியே
நீண்ட போராட்டம்
நிகழ்த்திய போராளி..

அற வழிப்பட்ட
அறிவியற் பயணமும்
அன்பொளி வீசும்
ஆன்மீகப் பார்வையும்
பிறர் நலம் கருதும்
பேரன்புப் பாதையும்
பெருமை பேசாது
பழகிடும் எளிமையும்
அரிவையர் மங்கையர்
அணங்குகள் பெண்கள்
அணிவகுத்திடவே
ஆக்கிய ‘ஐயை’யும்...
திறனுளோர் எவரெனத்
தேடிக் கொணர்ந்து
தேசிய வளத்திற்குப்
பலம் தரும் பண்பும்
நிறைவுறப் பெற்றதோர்
நிழலென நின்றவர்..
நினைவு அடங்கியே
நின்றது கொடுமையே!

‘ஒரிசா பாலு’ எம்
வரலாற்றின் உயிர்க்குரல்!
‘ஒரிசா பாலு’ எமது
இனமீட்பின் செயற்குரல்!

இவரது இழப்பு எம்
இனத்திற்கு இழப்பு!
இறைமையை வேண்டும்
ஈழத்திற் கிழப்பு!
தவமெனத் தனது
வாழ்வினை எமக்காய்த்
தந்த ஓர் தியாகியைத்
தரிசித்தோம் நாமெலாம்!

தன்னம்பிக்கையும்
தளராத உறுதியும்
புன்னகைத் திருக்கும்
பொறுமைக் குணமும்
தன்னகத்திருத்தியே
தன்கடன் ஆற்றிய
அன்புத் திருமகன்
ஒரிசா பாலு..
என்றென்றும் தமிழர்
இதயத்திருந்து
தன்பணி தொடர்வார்..
தாய் மொழி சிறக்கவே!

‘அன்பே தமிழ்! அதிலே
அமிழ்!’

ஒரிசா பாலுவின் அன்பன் **புலவர் சிவநாதன்**

# பேரவலத்தை மட்டக்களப்பு எதிர்கொள்ளப்போகின்றது

**மட்டக்களப்பு - மயிலத்தமடு,மாதவனை பகுதியில் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைக்காணி அபகரிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கால்நடை பண்ணையாளர்கள் ஆரம்பித்த போராட்டம் ஒரு மாதத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. மட்டக்களப்புக்கு மட்டுமன்றி, முழு இலங்கைக்குமே பாலை வழங்கிக்கொண்டிருந்த தமிழ்ப் பண்ணையாளர்கள் இன்று விரட்டப்பட்டுள்ளர்கள். இதற்கு எதிராகத்தான் அவர்கள் இப்போது கிளர்ந்தெழுந்திருக்கின்றார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்த போது இந்தப் போராட்டம் உச்ச நிலைக்குச் சென்றிருந்தது. பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்றை ஜனாதிபதி வழங்க வேண்டும் என்று பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அவர்களுடன் பேச்சு நடத்திய ஜனாதிபதி எந்தவொரு தீர்வையும் வழங்காமல் திரும்பிச் சென்றுவிட்டார். இந்த நிலைமைகள் குறித்து மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்**



## அரியநேத்திரன் செவ்வி

**மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் போராட்டம் கடந்த சுமார் ஒரு மாத காலமாக நடைபெற்று வருகின்றது. இந்தப் போராட்டத்தின் தற்போதைய நிலை என்ன?**

இந்த தொடர் போராட்டம் என்பது இன்று 29 நாளாக நடைபெற்று வருகின்றது. அதற்கு முன் 2020 ம் ஆண்டு காலப்பகுதியில் கூட பண்ணையாளர்கள் இவ்வாறு போராட்டங்களில் இடை இடையில் ஈடுபட்டார்கள் அதன் பிறகு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு வரும் என்று நம்பி இருந்தார்கள்

இதற்கு முன் இருந்த கிழக்கு மாகாண ஆளுநர், மகாவலி அபிவிருத்தி அதிகாரிகள், மற்றும் பாராளுமன்றத்தில் இருக்க கூடிய அமைச்சர்கள் என பல தரப்பினருடன் பேச்சுவார்த்தை செய்து இருந்தார்கள் அதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட கலந்து இருந்தார்கள். அதிலும் ஒரு தீர்வும் எட்டப்படாத நிலையில் 2021 மாசி மாதம் 11 திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது அதில் ஒரு தடை உத்தரவு போடப்பட்டது. அது தடை உத்தரவு என்பதை விட அந்த பண்ணையாளர்களை அகற்றுமாறு ஒரு தடை உத்தரவு வழங்கியதாக இருந்தது. அந்த உத்தரவு இன்று வரை அமுல்படுத்தப் படவில்லை என்றுதான் இந்த தொடர் போராட்டத்தை தற்போது நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

அவ்வாறு தடை உத்தரவு உள்ளபோதும் மேலும் அங்கிருக்கும் காடுகள் அழிக்கப்பட்டு அங்குள்ள நிலங்கள் அபகரிக்கப்பட்டு புதிதாக குடியேற்றங்கள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் சிங்கள குடியேற்ற வாசிகளைக் கொண்டு காடுகள் அகற்றப்பட்டு வருகின்றது. அதனை தவிர நீதிமன்ற தடை உத்தரவை மீறி புதிதாக புத்த விகாரை அமைப்பதற்கு ஒரு பௌத்த பிக்கு கூட அங்கு சென்று செயல்பட்டு வருகின்றார். இவ்வாறுதான் மிக மோசமாக மேய்ச்சல் நிலத்தை அபகரித்து வருகிறார்கள்.









**எவ்வாறான ஒரு மூலோபாயத்துடன் இந்த மேய்சல் தரை ஆக்கிரமிப்பை புத்த பிக்குகளின் ஆதரவுடன் சிங்களவர்கள் முன்னெடுக்கின்றார்கள்?**

நிச்சயமாக இதனை மேய்ச்சல் தரை பண்ணையாளர்களின் பிரச்சனைகள் என்று மாத்திரம் பார்க்க முடியாது. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையாகவும் பொலனறுவை மாவட்டத்தின் எல்லைக்கும் இடைப்பட்ட பிரதேசம் தான் இந்த மேய்ச்சல் நிலம்.

ஆகவே அவர்களது நோக்கம் என்னவென்றால் அங்கு சிங்கள மக்களை குடியேற்றம் செய்து அங்கு உள்ள மேய்ச்சல் தரை நிலங்களை அபகரித்து தற்போது உள்ள சிங்கள மக்களின் வீதம் என்பது தசம் ஐந்து அல்லது ஆறு வீதம்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளார்கள்.

அதேபோல் எழுபத்தி நாலு சதவீதமான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அதேபோல் இருபத்து ஐந்து சதவீதமான இஸ்லாமிய மக்கள் வாழ்கின்றனர். ஆகவே உங்களுக்கு தெரியும் இலங்கையில் இருக்க கூடிய பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு மாவட்டங்களை எடுத்து பார்ப்போமாக இருந்தால் யாழ் மாவட்டத்திற்கு அடுத்து அதிகமாக தமிழ் மக்கள் வாழும் இடம் மட்டக்களப்பு மாவட்டம்.

கிழக்கு மாகாணத்தை எடுத்து பார்ப்போமாக இருந்தால் அம்பாறை மாவட்டம் அல்லது திருகோணமலை மாவட்டம் இரண்டிலும் சிங்களவர்களது ஆக்கிரமிப்பு கூடுதலாக உள்ளது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களவர்களது குடியேற்றம் என்பது குறைவாக உள்ளது. ஆகவே அதிகரிப்பதற்குத் தான் இந்த மேய்ச்சல் நிலம் அபகரிப்புக்கள் ஊடாக சிங்கள மக்களை குடியேற்றம் செய்வதற்கே இந்த வேலைத்திட்டம் நீண்டகாலமாக முன்னெடுத்து வருவதனை அறிய முடிகிறது.

**இந்தப் பகுதி ஆக்கிரமிக்கப்படுவதன் பின்னணியில் அரசாங்கத்தின் கரங்கள் உள்ளதா?**

இதில் அரசாங்கம் சம்மந்தப்பட்டது என்பது இது ஒரு நீண்ட கால திட்டம் ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த போது நான் நினைக்கின்றேன் 1978 ம் ஆண்டு இந்த அரசியல் திருத்தம் கொண்டுவரப் பட்டதன் பின்பு அவர் நிறைவேற்று ஜனாதிபதியாக வந்ததற்கு பிறகு மகாவலி திட்டத்தை அமுல் படுத்தி அதன் ஊடாக ( மாதுரு ஓயா ) வலது கரை வாய்க்கால் திட்டத்தை ஆரம்பித்து அதன் ஊடாக சிங்கள மக்களை குடியேற்றம் செய்வதர்க்கு அவர்கள் செய்வதற்கு அவர் முயற்சி செய்திருந்தார்.

அதன் பிறகு நாட்டில் ஏற்பட்ட தமிழீழப்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# திருகோணமலையில் சிறுபான்மைக்கு தீர்வில்லாத நில ஆக்கிரமிப்பு

ஹஸ்பர் ஏ ஹலீம்

சிறுபான்மை ஆக்கப்பட்ட மக்களின் பூர்வீக நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டே வருகிறது. திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் இந்த நிலவரம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அண்மையில் அரிசி மலை விகாரைக்கு அண்மித்த பகுதியில் பௌத்த மதகுரு ஒருவரினால் பூஜா பூமி என்ற அடிப்படையிலும் தொல் பொருள் என்ற போர்வையில் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

அரிசிமலை விகாரையை அண்மித்த பல ஏக்கர் நிலங்கள் தனியார் மக்களுக்கு சொந்தமான விவசாய காணியாகும் இவர்களின் வாழ்வாதாரம் மீன் பிடி விவசாயம் சேனை பயிர்ச் செய்கை என ஜீவனோபாயமாக காணப்படுகிறது .



அப்பாவி மக்களின் காணிக்குள் அடாத்தாக கையகப்படுத்த முனையும் பௌத்த பிக்குகளை யாரும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு போகின்றது.

ஏழை மக்களின் காணிகளை அதுவும் சிறுபான்மை சமூகத்தினரின் காணிகளே கபளீகரம் செய்கின்றனர். பூஜா பூமி, தொல்பொருள் திணைக்களத்தின் மூலமான வர்த்தமானி அறிவித்தல் என மக்கள் காணிகளை அவர்களது விவசாய பூர்வீக நிலங்களை கையகப்படுத்த முனைகின்றனர்.

இது தொடர்பில் உரிய தரப்புக்கள் அம் மக்களுக்கு நிரந்தர தீர்வினை பெற்றுத் தருவதில்லை எனவும் அங்கலாய்க்கின்றனர். தேர்தல் காலங்களில் வாக்கு கேட்பதற்காக வரும் அரசியல் தலைமைகள் அரசியல்வாதிகள் காணி பிரச்சினை என்றால் வருவதில்லை வெறுமனே அறிக்கைகளை மாத்திரமே விடுகிறார்கள் செயலில் காட்டுவதில்லை தீர்வில்லாமல் வாழ்க்கை தொடர்கிறது எனவும் தெரிவிக்கின்றனர்.



மக்கள் பிரதிநிதிகளாக வாக்கு போட்டு நாடாளுமன்றம் அனுப்பிய மக்களை இவர்கள் கவனிப்பதில்லை பிரச்சினைக்கான தீர்வு இல்லாமல் திருகோணமலை மாவட்ட சிறுபான்மை நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவது வருத்தமளிக்கிறது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் கூட பங்கேற்காத நிலையில் காணப்படுகிறார்கள். சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு வருகின்றன பெரும்பான்மை இன மக்கள் யாருமே இல்லாத இடத்தில் பௌத்த விகாரை அமைக்கவும் சிலை வைக்கவும் முயற்சிக்கின்ற பௌத்த மதகுருக்கள் மூலமாக மக்களுக்கான தொடர் பிரச்சினையாக இலுப்பைக்குளம் பகுதியிலும் நடந்தேறுகிறது.

எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் நிலப் பிரச்சினைகள் தீர்வதில்லை. விவசாய நிலங்கள் மக்கள் காணிகள் அடாத்தாக கையகப்படுத்த முனைகின்றனர். இதன் மூலமாக நல்லிணக்கம் நாட்டில் சீர்குலைக்கப்படுகிறது. கிண்ணியா பிரதேசத்தில் உள்ள குரங்குபாஞ்சான் பகுதியில் பௌத்த மதகுரு தலைமையில் ஐவர் அடங்கிய குழு அங்கு சென்றதனால் பதற்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது தனியாருக்கு சொந்தமான நிலத்தில் இவர்கள் ஏன் செல்ல வேண்டும் புதையல் தோண்டவா? அல்லது வேறு நடவடிக்கைக்காக என ஒட்டு மொத்தமாக பார்த்தால் காணி கபளீகரம் செய்ய வந்திருப்பார்கள் எல்லை கற்களை இடுவார்கள் என்ற அச்ச நிலை குடியிருப்பாளர்களிடத்தில் ஏற்பட்டுள்ளது.

இது போன்ற காணி பிரச்சினை மூலமாக திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. பௌத்த பிக்குகள் ஒரு இடத்தில் போராட்டம் செய்தார்கள் சில இடங்களில் சிறுபான்மை அரசியல்வாதிகள் பொது மக்கள் என இலுப்பைக்குள விகாரை கட்டுமான பணியின் போது வீதிமறியல் போராட்டங்களும் இடம் பெற்றுள்ளன. சட்டரீதியான தடை உத்தரவு கிழக்கு மாகாண ஆளுனரின் தடை உத்தரவு என கூறப்பட்ட போதிலும் அதையும் மீறி விகாரை கட்டிடப்பணி விகாரைக்கான பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது.



மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது கூட்டத்தை குழப்பிய தேரர் உடன் கலைந்து சென்ற ஆளுனர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற நிலவரமும் அண்மைக் காலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு சிறுபான்மை சமூகத்துக்கு நீதிமன்றம் ஊடான தடையும் இலுப்பைக்குள விவகாரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்து அவர்களின் கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இருக்கும் பொது இவ் விடயங்கள் கண்டிக்கத்தக்கது.

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான வயல் நிலங்கள் பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டு அப்பாவி பொதுமக்கள் புத்த பிக்கு தரப்பினரால் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ், முஸ்லீம், மக்களிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நில அபகரிப்புக்கள் அதிகரித்து காணப்படுகின்றது. விகாரைகள் என்ற பெயரில் தமிழ் முஸ்லீம் மக்களின் வரலாற்றை மாற்றி யமைக்கும் வகையில் குடியிருப்புக்களுக்கு மத்தியில் விகாரைகள் அமைக்கப்படுகின்றது. அதே நேரம் எல்லை கிராமங்களில் வயல் நிலங்கள் குடியேற்றங்கள் என்ற பெயரில் அபகரிக்கப்படுகின்றது



புல்மோட்டை பகுதியிலும் முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான வயல்நிலங்கள் புத்த பிக்குகளினால் “பூஜா பூமி” என்றபெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அங்கு முஸ்லீம் விவசாயிகள் மற்றும் பெண்கள் காட்டுமிராண்டிதனமாக தாக்கப்பட்டுள்ளனர். இந்த செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்டு இனக்கலவரத்தை தூண்டும் வகையில் இனவாத செயற்பாடுகள் அதிகரித்தவன்னம் உள்ளது அரச இயந்திரமும் பாதுகாப்பு தரப்பினரும் வேடிக்கைபார்ப்பவர்களாக இருப்பது தமிழ், முஸ்லீம் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது

புல்மோட்டையில் ஆக்கிரமிக்கபடும் விவசாயநிலங்கள் மக்களிடம் மீள வழங்கப்படவேண்டும். திட்டமிட்டு தமிழ், முஸ்லீம் மக்கள் மீது நடத்தப்படும் இனக்குரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் ஸ்ரீபிரசாத் தெரிவித்துள்ளார்.



அன்றாடம் உழைத்து தங்களது ஜீவனாம்சத்தை கழிக்கும் மக்களின் துயர் துடைக்க யாருமின்றி கண்ணீர் வடிக்கின்றனர். அத்துமீறி தனியார் காணிக்குள் நுழைய இவர்களுக்கு சண்டித்தன அதிகார போக்கை வழங்கியது யார் என்பதே கேள்வியாக உள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இந்த பிரச்சினை தொடராக இருக்கிறது குறிப்பாக சிறுபான்மை சமூகம் வாழும் பகுதிகளில் இது தொடர்கின்றன. இந்த நிலை இன்றி மக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மேய்ச்சல் தரையும்... பண்ணையாளர்களும்

சசி புண்ணியமூர்த்தி

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப் பிரதான பேசுபொருளாக இருப்பது மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரை விடயம். யுத்தம் முடிவுற்ற காலம் தொட்டு இங்கு கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் கால்நடை வளர்ப்பாளர்கள் அயல் மாவட்ட அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களினால் மிகவும் பாதிப்பினை எதிர்நோக்கி வருகின்றார்கள். போராட்டமே வாழ்க்கையாகிப் போன தமிழர்களின் நிலைமை தமிழ் பண்ணையார்களையும் விட்டு வைக்கவில்லை. யுத்தம் மௌனிக்கப்பட்டாலும், தமது வாழ்வாதாரத்திற்கான போராட்டத்தினை அப்பகுதியில் தினம் தினம் பண்ணையாளர்கள் முன்னெடுத்துக் கொண்டே வருகின்றார்கள்.



பாரியதொரு அரசியல், சமய பின்புலத்துடன் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து தங்கள் கால்நடைகளையும், கால்நடை மேய்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களையும் பாதுகாப்பது பாரிய சவாலானதொன்றாக இவர்கள் மத்தியில் இருந்து வருகின்றது. எத்தனையோ பேர் எத்தனையோ கள விஜயங்களை மேற்கொண்டும் இதற்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை.

2012ம் ஆண்டு தொடக்கம் 2017ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மாகாணசபையூடாக இந்த விடயத்தில் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களைக் கட்டுப்படுத்தி அவர்களுக்கெதிராக வழங்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும் முடிந்திருந்தாலும். மாகாண சபை கலைந்ததன் பின்னர் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் வருகை இன்னும் பெருகியது. அதிலும் 2019ம் ஆண்டு புதிய ஜனாதிபதியின் வருகை அதனைத் தொடர்ந்து 2020ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அது வீரியம் பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்க காலத்திலேயே பண்ணையாளர்களுக்கும், அவர்களின் கால நடைகளுக்கும் அநீதிகள் பல இழைக்கப்பட்டு, கால்நடைகளும் சுட்டுக் கொல்லப்பட்டன. இது தொடர்பில் பொலிஸ், வனவள திணைக்களம், மகாவலி அதிகாரசபை என எங்கு முறைப்பாடு செய்யப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.



2021ம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரம், இரா.சாணக்கியன் ஆகியோரினால் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஊடாக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 2022.07.06ம் திகதி மயிலத்தமடுவில் அத்துமீறி குடியேறி பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என மகாவலி அதிகாரசபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. ஆனால் இதுவரைஅது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தங்களது கால்நடைகளுக்கான பாரம்பரியமாக மேய்ச்சற்தரையாகப் பயன்படுத்தி வரும் மயிலத்தமடு மாதவணை மேய்ச்சற்தரையினைக் கோரியும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் நடவடிக்கைகளை நிறுத்தக் கோரியும் பலவாறான போராட்டங்களை மேற்கொண்ட பண்ணையாளர்கள் தற்போது தீர்வு கிடைக்கும் வரையிலான தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இப்போராட்டம் காரணமாக கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இப் பிரதேசத்தில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைப்பதான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இது குறித்த பிரச்சனைக்கு எவ்விதத்தில் தீர்வாக அமையும் என்பது கேள்வியே.



தங்களின் மேய்ச்சற்தரை கோரிய அறவழிப் போராட்டத்தின் கோரிக்கையை ஜனாதிபதி அவர்கள் ஏற்று நடவடிக்கை எடுத்து உரிய தீர்வினை வழங்க வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுகோள். ஏனெனில் இந்த விடயத்தில் எந்த திணைக்களத்தின் மீதும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதே கால்நடை வளர்ப்பாளர்களின் நிலைப்பாடு.

இந்தப் பிரதேசம் மகாவலி அதிகாரசபைக் குட்பபட்டதா? வன இலாகாவிற்கு உட்பட்டதா? என்ற கேள்விகளுக்கு மத்தியிலே தீர்வு எட்டப்படுவதற்கு பல இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே மகாவலி அதிகாரசபைக்குள் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளே உள்ளடங்குகின்றன. ஏறாவூர்ப்பற்று, கோரளைப்பற்று தெற்கு, கோரளைப்பற்று மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள காணிகள் மகாவலிக்குள் உள்வாங்கப்படுகின்றது. அதிலும் ஏறாவூர்ப்பற்றில் 1829 ஹெக்ரேயர் காணிகளையும், கோரளைப்பற்று மேற்கில் 12570 ஹெக்ரேயர் காணியும், கோரளைப்பற்று தெற்கில் 27943 ஹெக்ரேயர் காணிகளும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளது. இது முழுவதிலும் 3025 ஹெக்ரேயர் மேய்ச்சற் தரைக்கென்றும், 2700 ஹெக்ரேயர் நெற் பயிர்ச்செய்கைக்கும், 6712 ஹெக்ரேயர் இயற்கைத் தோட்ட செயற்பாடுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதில் 1148 ஹெக்ரேயர் மக்களைக் குடியமர்த்துவதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபைக்குள் உள்வாங்கப்படுகின்ற வனவள காணிகள் 24708 ஹெக்ரேயர். இவ்வாறே மகாவலி அதிகார சபைக்குட்படுத்தப்பட்ட காணிகள் வகுக்கப்படுகின்றன.

2020.11.10ம் திகதி புற்தரைக் காணிகளை பிரதேச செயலாளர்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கானதீர்மானம் எடுக்கப்பட்டது. இப்புற்தரைக் காணிகளை மகாவலி அதிகாரசபை கையகப்படுத்துவதற்கு முன்னர் நீர் விடப்பட்டு மிகச் செழிப்பாகவே இருந்தது.

இதில் மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் மயிலத்தமடு என்று பிரயோகிக்கும் காணியானது கோரளைப்பற்று தெற்கு மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காணிகளே. இதில் ஏறாவூர்ப்பற்றினுள் சுமார் 4000 ஏக்கர்களும், கோரளைப்பற்று தெற்கில் சுமார் 1000 ஏக்கர் காணிகளுமே பண்ணையாளர்களால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பிரச்சினைகள் ஏற்படுவதும் இந்த குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் தான். ஆனால், இதனை அறியாதவர்கள் சொல்வது போல் பத்தாயிரம், பதினைந்தாயிரம் ஏக்கர் என்று சொல்வதெல்லாம் பொய்யான விடயங்களாகும்.

இதனைத் தாண்டிய பகுதிகள் வனப் பகுதிகளாகும். இக்காட்டுப் பகுதிக்குள் பண்ணையாளர்கள் கால்நடைகளை மேய்ப்பதென்பது முடியாத காரியம், பாரிய காட்டுப்பகுதி, கொட்டில்கள் அமைக்க முடியாது. வன விலங்குகளின் பிரச்சினைகள் காணப்படும். இதன் காரணமாக அவர்கள் அப்பகுதிகளுக்குள் மேய்ச்சற்தரை கேட்க முடியாது. எனவே அவர்கள் தற்போதிருக்கும் சுமார் 5000 ஏக்கர் பரப்பு கொண்ட பகுதியையே கோரி நிற்கின்றார்கள். அதே நேரம் அத்துமீறிய பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்களும் தங்கள் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது இந்த 5000 ஏக்கர் காணியினுள் தான். இவ்வாறு அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இத்தனை ஏக்கர் என்றோ, இத்தனை பேர்தான் என்றோ எந்த வரையறையும் இல்லை.



நாளுக்கு நாள் அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் விரிவாக்கத்திற்கு அளவு இல்லை. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ஏக்கர் அளவுகளும் இல்லை. எழுந்தமானமாக அவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடலாம். கால்நடை வளர்ப்புக்கும், பயிர்ச்செய்கைக்கும் நடுவில் வேலி அமைத்து பிரித்து செய்வதென்பதெல்லாம் சாத்தியப்பாடு இல்லாத ஒரு விடயம். இதில் அத்துமீறிய விவசாயிகளுக்கு காணி அளவு எவ்வளவு, எத்தனை விவசாயிகள் என்ற வரையறையைக் காண வேண்டும்.

மயிலத்தமடு பிரதேசமானது மாவட்டத்தினதும், மாகாணத்தினதும் எல்லைகளை உள்ளடக்குகின்றது. பொலனறுவை மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடையே மாதுறு ஓயா ஆறு எல்லையாக இருக்கின்றது. இதுவே கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கிடையிலான எல்லையாகவும் இருக்கின்றது. மறுபக்கம் அம்பாறை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குமான எல்லை. அதுவும் ஒரு ஆற்றினூடான எல்லையாகவே இருக்கின்றது. இது மண்டானை ஆறு என்று சொல்லபப்படுகின்றது. சிங்கள இனத்தவர்கள் இதனை திக்காகல அல என்று

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

# International Crimes

## பகுதி 05

சுட்டுக்கொலையொன்று நிகழும் போது இனப்படுகொலைக்கான உள்நோக்கம் அக்கொலைகளுக்குப் பின்னால் இருந்தது என்பதனை நிரூபிப்பதுதான் இங்கு மிகப்பெரும் சவாலாக உள்ளது.



பன்னாட்டு சக்திகள் இக்கொலைகளுக்குப் பின்னால் தமது கரங்களையும் கொண்டிருக்குமாயின் அக் கொலைகளை இனப்படுகொலையென நிரூபிப்பதென்பது மிகப்பெரும் துன்பியலாக இனப்படுகொலைக்கு உள்ளான மக்களுக்கு இருக்கும் என்பதே உலகின் வரலாறாக உள்ளது.

அவ்வாறானதொரு நிலையையே ஈழத் தமிழர்களாகிய நாங்கள் எதிர்கொண்டுள்ளோம். என்றாலும் எமக்கு நிகழ்ந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க பெரும் நம்பிக்கையுடன் போராடும் ஆத்மபலம் உள்ளதொரு இனமாக நாங்கள் இருப்பதுதான் உலகிற்கே இன்று சவாலாக உள்ளது.



எம்மீது நிகழ்த்தப்பட்ட கொலைகளுக்கு பின்புலமாக அமைந்த சிங்களப் பேரினவாதச் சிந்தனை இனப்படுகொலையை நோக்கமாகக் கொண்டது என்பதனை நிரூபிப்பதற்கான அடிப்படை வரையறுப்புகள் எவை என்பதனை முதலில் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

எனவே இனப்படுகொலைக்கான உள்நோக்கம் என்பதை பன்னாட்டு நியமங்கள் எவ்வாறு வரையறுத்துள்ளன என்பதைக் கருத்திற் கொள்வது முக்கியமானது

பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றமானது குற்றத் தத்துவங்கள் தொடர்பாக வரையறுக்கும் போது: நிகழ்ந்த உண்மைச் சம்பவங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட புலச்சூழ்நிலைகளில் இருந்து இனப்படுகொலைக்கான உள்நோக்கம் இருந்தது என்பதை அனுமானிக்கக் கூடியதாக இருக்கும் என வரையறுத்துள்ளது.

முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான குற்றவியல் தீர்ப்பாயமானது வெளிப்படையானதும்



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள்
பொத்தக ஆசிரியர்,
பட்டய முகாமைக்
கணக்காளர்

நேரடியாகத் தெரியக்கூடியதுமான சான்றுகள் இல்லாதவிடத்து சூழ்நிலைச் சான்றுகளைக் கொண்டு உள்நோக்கத்தை அனுமானிக்க முடியும். இவ்வாறு அனுமானிக்கக்கூடிய சான்றுகளைக் கொண்டு நிரூபிக்க முயலும் போது கிடைக்கக்கூடிய பொருத்தமான சான்றுகளுள் நியாயமான சான்றுகளை மட்டும் முன்வைத்து இனப்படுகொலைக்கான உள்நோக்கத்தை அனுமானித்துக் கொள்ள வேண்டும் என வரையறுத்தது.

ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயமானது “உள்நோக்கம்” தொடர்பாக மேலும் பரந்த முறையிலான பார்வையை வெளிப்படுத்தியிருந்தது. அதன்படி: இனப்படுகொலைக்கான உள்நோக்கம் இருந்ததென்பதை நிகழ்ந்த உண்மைச்சம்பவங்கள் மற்றும் குறியீடுகளின் அடிப்படையில் அனுமானிக்க கூடியதாக இருப்பதுடன் கீழே தரப்படுபவற்றுடன் மட்டும் நின்றுவிடாமல், கீழ்தரப்பட்ட நடவடிக்கைகளும் உள்நோக்கம் இருந்தது என்பதை நிரூபிக்கப் போதுமானவை என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து சில விடயங்களையும் பட்டியலிட்டுள்ளது.



1. குற்றத்தை நிகழ்த்திய குறித்த நபராலோ அல்லது ஏனையவர்களாலோ குறித்த குழுவின் மீது நுட்பமாக நிகழ்த்தப்பட்ட ஏனைய குற்ற நடவடிக்கைகளின் பொதுப் பண்பைக் கொண்டோ
2. நிகழ்த்தப்பட்ட கொடுமைகளின் பரவலான அளவு
3. அக் கொடுமைகளின் பொதுப் பண்பு
4. அக் கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட பிராந்தியம் அல்லது நாடு
5. குறித்த குழுவின் உறுப்பினர்கள் என்பதைக் கணக்கிலெடுத்து அவர்களைத் திட்டமிட்ட வகையிலும் நுட்பமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை
6. ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களை இத் தேர்விற்கு ஏற்றவகையில் புறக்கணித்திருக்கும் முறை
7. இக்கொடுமைகளை ஊக்குவித்த அரசியல் தத்துவக் கோட்பாடு
8. மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட அழித்தொழிக்கும் மற்றும் பாகுபடுத்திப் பார்க்கும் நடவடிக்கைகள்
9. குறித்த குழுவின் ஆதாரங்களைச் சிதைக்க முனையும் நடவடிக்கைகள்



ஆகவே பன்னாட்டுக்குற்றவியல் நீதிமன்றம் *(International Criminal Court)*, முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான குற்றவியல் தீர்ப்பாயம் *(International Criminal Tribunal for former Yugoslavia - ICTY)* மற்றும் ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயம் *(International Criminal Tribunal for Ruwanda - ICTR)* ஆகிய மூன்றும் மிகத்தெளிவாக இனப்படுகொலைக்கான உள்நோக்கமிருந்தது

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# மாற்றாந்தாய் மனப்பான்மை

துரைசாமி நடராஜா

மலையக மக்களின் பிரச்சினைகள் அதிகமுள்ள நிலையில் இவற்றை தீர்த்து வைப்பதில் ஆட்சியாளர்கள் கரிசனை காட்டுவதில்லை. அவர்கள் இவ்விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே செயற்படுகின்றனர். எனவே இம்மக்களின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தி உரிய தீர்வினை பெற்றுக் கொடுக்க மலையக அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.



இந்நிலையில் எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள்மனித உரிமைகள்பேரவையின்அறிக்கையில் மலையகதமிழர்களின்பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளீர்க்கப்படும் என்று ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ பிரன்ச், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினரிடம் அண்மையில் வலியுறுத்தி இருக்கின்றார். இத்தகைய முன்னெடுப்புக்கள் மலையக மக்கள் சாதக விளைவுகள் பலவற்றையும் பெற்றுக் கொள்ள உந்துசக்தியாக அமையும் என்று கருதப்படுகின்றது.

19ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்த இந்திய வம்சாவளி மக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை பல்வேறு துன்ப துயரங்களுக்கும் ஆளாகி வருகின்றனர். இவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறாக காரணிகள் பலவும் அமைந்துள்ள நிலையில் இம்மக்களை ஒடுக்கி கோலோச்சுவதையே இனவாதிகள் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னரும் சரி அல்லது சுதந்திரம் பெற்ற பின்னரும் சரி இந்திய வம்சாவளி மக்கள் மீதான நெருக்கீடுகளுக்கு ஒரு போதும் குறைவிருக்கவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இம்மக்களுக்கு பிரஜாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பவற்றை டொனமூர் வழங்கமுற்பட்டபோதும், அதன் பின்னர் இம்மக்களுக்கான சிற்சில அபிவிருத்திகளைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்கள் காய் நகர்த்தல்களை மேற்கொண்ட போதும் இனவாதம் எகிறிப் பாய்ந்தது. இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட இம்மக்கள் சமூகத்தினர் இலங்கையில் உரிமைகளை பெற்றுக் கொள்ள உரித்துடையவர்களல்லர். எனவே இவர்களை மீளவும் இந்தியாவுக்கே திருப்பியனுப்ப வேண்டும் என்ற கோஷங்களும் ஒருகாலத்தில் வலுப்பெற்று காணப்பட்டது. இனவாத சிந்தனையாளர்கள் இதில் வெற்றியும் கண்டனர்.



இதனடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் விளைவாக இந்தியத் தமிழர்கள் பலர் மீண்டும் தாயகம் செல்ல நேர்ந்தமை துயரமான நிகழ்வாகும். இதற்கேற்ப 1971 இல் 25,384 பேரும், 1973 இல் 41,153 பேரும், 1975 இல் 24,570 பேரும், 1977 இல் 39,818பேரும்,1978 இல் 29,438 பேரும், 1980 இல் 18,867 பேரும், 1981 இல் 261,18 பேரும், 1983 இல் 32,526 பேரும் தாயகம் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறெனினும் 1971 இற்கும் 1984 இற்கும்இடையில்நான்குஇலட்சத்து46ஆயிரத்து 338 பேர் தாயகம் திரும்பி இருந்ததாக தகவல்கள் வலியுறுத்துகின்றன.இந்நிலையானது இலங்கையில் இந்திய தமிழர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சிநிலை ஏற்படுவதற்கு அடித்தள மாகியது.

1911 இல் இந்திய வம்சாவளி மக்களின் எண்ணிக்கை 531,000 ஆகும். இது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 12.9 வீதமாக இருந்தது. 1946 இல் 780,000, 1963 இல் 1,123,000, 1971 இல் 1,173,000, 1981 இல் 818,000 என்றவாறு இந்திய வம்சாவளி மக்களின் எண்ணிக்கை அமைந்திருந்தது. இதேவேளை 2012 இல் 839,504 ஆக இந்திய வம்சாவளி மக்களின் எண்ணிக்கை காணப்பட்ட நிலையில் இது இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 4.1 வீதமாக காணப்பட்டது. இவ்வாறாக இந்திய வம்சாவளி மக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சிநிலை ஏற்படுவதற்கு ஒப்பந்தங்கள் ஒருபுறமிருக்க இடம் பெயர்வுகள், பிழையான பதிவுகள் என்பனவும் வலுசேர்த்தன. எனினும் மேற்கண்ட தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பில் புத்திஜீவிகள் சந்தேகமெழுப்பியுள்ளதையும் இங்கு குறிப்பிட்டாதல் வேண்டும்.



இந்திய வம்சாவளி மலையக மக்கள் இந்நாட்டில் சமகாலத்திலும் சரி அல்லது முன்னைய காலங்களிலும் சரி நெருக்கீடான வாழ்க்கைப்போக்குகளைகொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். லயத்துக் கலாசாரத்தின் தீய விளைவுகளுக்கு மத்தியில் வாழ்க்கை நடாத்தும் இவர்களில் பலருக்கு தனிவீட்டுக் கலாசாரம் என்பது இன்னும் எட்டாத கனியாகவே இருந்து வருகின்றது. இலங்கையில் வீடமைப்பு தொடர்பில் பல்வேறு விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டபோதும் மலையக மக்கள் இவற்றில் உரியவாறு உள்ளீர்க்கப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

அரசாங்கம் இம்மக்களுக்காக பல்லாயிரக் கணக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்க உத்தேசித்துள்ளதாக வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும், தேர்தல் விஞ்ஞானங்களிலும் கவர்ச்சியான வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. பெருந்தோட்டத் துறையில் 50 ஆயிரம் அலகுகளைக் கொண்ட வீட்டுத்தொகுதியை ஏற்படுத்தப்போவதாக 2014 ம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட முன்மொழிவு வலியுறுத்திய அதேவேளை தோட்டத்துறையில் வீடமைப்பு அபிவிருத்திக்காக அடுத்த மூன்று வருடத்துக்குள் 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுவதாக 2022 ம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டம் வலியுறுத்தியது.



இதேவேளை மலையக மக்களை தற்போதைய லயன் வாழ்க்கையில் இருந்து மீட்டெடுத்து காணி உரிமையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட நவீன மயமான கிராமிய சூழலில் தனி வீடுகளும்,பொது வசதிகளும் அமைத்துக் கொடுப்பதுடன் இத்திட்டம் முழுமையாக தோட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் பிரதேச சபைகளின் மூலம் சேவைகளை பெறக்கூடியவாறு உருவாக்கிக் கொடுக்கப்படும் என்று 'மாற்றத்தை நோக்கி ஒன்றிணைவோம். மைத்திரியின் 100 நாள் ஆட்சியில் புதிய நாடு' தொடர்பான நாட்குறிப்பு வலியுறுத்தியது. எனினும் இவையெல்லாம் பின்னர் ஏட்டளவில் முற்றுப்பெற்று ,காற்றில் பறந்த வாக்குறுதிகளாகியமை யாவரும் அறிந்த விடயமாகும். இத்தகைய நிலைமைகள் அரசாங்கத்தின் மீதான மலையக மக்களின் நம்பகத்தன்மைக்கு பங்கம் விளைவிப்பதாக அமைந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

பொருளாதார அபிவிருத்தி, ஊதிய அதிகரிப்பு, சுகாதார மற்றும் மருத்துவ மேம்பாடு, கல்வி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி போன்ற சகல விடயங்களிலும் ஆட்சியாளர்கள் வழங்கிய வாக்குறுதிகள் கானல் நீராகியமையையே அவதானிக்க முடிந்தது. இதன் தொடர்ச்சி இன்னும் முற்றுப் பெற்றதாக இல்லை.

### ஆய்வின் வெளிப்பாடுகள்

அத்தோடு மலையக மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பதை இழுத்தடிக்கும் நோக்கில் அவ்வப்போது விசேட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டமையையும் காண முடிந்தது. வரலாற்றில் தொடர்ச்சியாகவே இந்நிலைமையை அவதானிக்க முடியும். இக்



குழுக்களின் முன்வைப்புக்கள் மலையக மக்களின் பின்தங்கிய வெளிப்பாடுகளை படம் பிடித்து காட்டுவதாக அமைந்தது. இதற்கமைய

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# மொழி கற்றல்: தமிழ் ஆங்கிலம்

## Learning languages-tamil English

நூல் வெளியீட்டு விழா(07.10.2023 சனிக்கிழமை) மாலை 7 மணி வரை சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.



இந் நூலின் ஆசிரியை முனைவர் திருமதி றீற்றா பற்றிமாகரன் அவர்கள் 46 ஆண்டு காலமாகக் கற்பிக்கும் அனுபவமுள்ள சிறந்த ஆசிரியை. அது மட்டுமல்லாது ஊடக வியலாளராகவும் ஆய்வாளராகவும் கல்வியியலாளராவும் தமிழுக்குச் சேவையாற்றும் வண்ணம் பல சேவைகளையாற்றி வருகிறார்.

இந் நிகழ்வானது ஐந்து பெண்களின் மக்கள் ஒளியேற்று ஒளிவணக்கத்துடன் தாயக விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த அந்த மாவீரர்களுக்கும் மக்களுக்குமான அகவணக்கம் இரு நிமிட அமைதி வணக்கமாக இடம்பெற்று நிகழ்வுகள் ஆரம்பமானது. அடுத்து தேவாரங்கள் பாடப்பெற்று நற்செய்தியும் வாசிக்கப்பட்டு இறைவணக்கம் தொடர்ந்தது. தமிழ் தாய் வாழ்த்துப்பாடலை ஈழத்து மெல்லிசை மும் மூர்த்திகளில் ஒருவரான மாணிக்கம் சத்திய மூர்த்தி அவர்கள் பாடிடத் தமிழ் வணக்கம் இடம்பெற்றது.

சட்டத்தில் முனைவரும் இந்திய அரசியல மைப்பின் அறிஞருமான அருட்தந்தை முனைவர் கிறிஸ்து இராசாமணி அவர்கள் நூலாசிரியையின் பெரும் உழைப்பின் கனி இந்நூல் எனக்கூறி இறை யாசி வழங்கினார்.




அடுத்து சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவரும் நூலுக்கு முகவுரை வழங்கியவருமான பேராசிரியர் முனைவர் ஆம்ஸ்ரோங் அவர்களின் வாழ்த்துரை இடம் பெற்றது. இந்நூல் மொழிகளுக்கான கலைக் களஞ்சியம். மொழியியல் இலக்கணவி யல் இரண்டுக்குமான பேருதவிகளைத் தரவல்ல அற்புதப் படைப்பு. மாணவர் மட்டுமல்ல பல்கலைக் கழகங்களும் பயன்படுத்தக் கூடிய சிறந்த நூல் என்று வாழ்த்தினார். தொடர்ந்து இலண்டனின் பெரும் புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்களின் அன்பும் நட்பும் பாசமும் தமிழாகப் பாய்ந்த கவிதா வாழ்த்து காதுகளுக்குத் தமிழ் இன்பம் தந்தது.

இந் நூலின் ஆசிரியையின் மாணவரான இலக்சிகன் வாமதேவன் தனது ஆசிரியையின் இப் புத்தகம் குறித்த மாணவர் பார்வையை வழங்குகையில் தமிழ் தாய் மொழியாய்ப் பல கிளை மொழிகளுக்கு விளங்குவதைச் சுட்டிக் காட்டி எழுத்துப் பிழைகளைத் தவிர்ப்பதற்கும் இலகுவாக வார்த்தைகளை பழகுவதற்கும் இந் நூல் அரிய நூலாக அமைகிறது எனக் கூறினார்.

நூலைத் திறனாய்வு செய்த ஆங்கில ஊடகவியலாளரும் கலைஞரும் உயிரோடைத் தமிழ் வானொலி இயக்குனருமான திரு யோக்கிம் இருதயானந்தன் அவர்கள் தனது திறனாய்வு உரையில் ஆய்வு முறை கையாளப்பட்ட விதம், பாராட்டுக்கு உரியது. தமிழ் மொழியின் சுரப்பாக இந் நூல் விளங்குகின்றது. அனைவருக்கும் தமிழ் ஆங்கில வளர்ச்சிக்கு உதவக் கூடிய நூல். தமிழ் மொழியில் தொழில்நுட்ப வார்த்தைகளின் பதிவு எனப் பல நாளாந்த வாழ்வுக்கு உதவும் விடயங்களைச் சுட்டிக் காட்டினார். தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பவர்களுக்கு மொழிகளின் பரப்பு அகலத்தை மாணவர்கள் அறிய இது ஓர் அற்புதமான நூலெனக் கூறினார்.

தமிழ்ப் பெருங்கடல் என மகுடம் சூட்டப்பட்ட அரசியல் ஆய்வாளரும் மூத்த தமிழ் அறிஞருமான திரு பற்றிமாகரன் அவர்கள் தமிழறிவை ஊற்றாய் கொண்ட நூலறிமுகத்தைச் செய்து நிகழ்வைச் சிறப்பித்தார்.

பேசிங்ஸ்டொக் தமிழ்ப்பள்ளி நிறுவனர் திரு நந்தக்குமார் ஆசிரியையின் கற்பித்தல் திறன் குறித்த அருமையான அனுபவ உரையினைச் சிறப்பான முறையில் வழங்கினார்

கவிஞர் மா.இந்துசேகரனின் கவிதா உரை தொடர்ந்தது. உயிரோடைத் தமிழின் நேயர் மனங்கவரும் ஊடகவியலாளரும் நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான இலட்சுமி அவர்கள் ஆசிரியை யின் இலக்கணக் கற்பித்தலின் தனிச் சிறப்புகள் குறித்து அனுபவ உரை வழங்கினார்.

இந்நூல் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் கற்கவும் கற்பிக்கவும் சிறந்ததோர்கையடக்க நூல் என அவர் பாராட்டினார்.

நூலின் முதற்பிரதியை மூத்த தமிழ்ப் புனைகதைப் படைப்பாளரும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளருமானசாவித்திரி அம்மா பெற்று நூல் வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார்.

நூலாசிரியைஏற்புரைவழங்கியதைஅடுத்து விழாவின் மையப் பொருள் உரையைப் "பன்மொழிக் கல்விச் சூழலில் தாய் மொழிக் கல்வி" என்னும் பொருளில் ஊடகத் திறனாய்வாளர் போரியல் ஆய்வாளர் முனைவர் பிரபாகரன் மிக ஆழமான கருத்துக்களு டன் நிகழ்த்தி நிகழ்ச்சிக்குச் சிறப்பூட்டினார்.

நிகழ்ச்சித் தொகுப்பாளராக கவிஞையும் தலைசிறந்த இளம் படைப்பாற்றலாளருமான முகிலினி தனது கணிரென்ற குரலில் செய்து நிகழ்ச்சிக்கு மெருகூட்டினார். செயற்பாட்டுக் கான அழைப்பும் நன்றியுரையும் ஆசிரியர் சூ.யோ. பற்றிமாகரன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டு நூல் வெளியீட்டு விழா நிறைவு பெற்றது.

• • •






# இஸ்ரேலின் கற்பனைக்கு அப்பால்

# ஹமாஸ் போராளிகள் தங்களை விருத்தி செய்தார்களா?

தமிழில்: ஜெயந்திரன்

கடந்த சனிக்கிழமை ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்த போது, பயன்படுத்திய உத்திகள், ஹமாஸ் இதற்கு முதல் பயன்படுத்தியிராத அதிநவீனத்துவம் வாய்ந்த தாக்குதல் உத்திகள் என்ற கருத்து பரவலாக நிலவுகின்றது.



இஸ்ரேல் மீது ஹமாஸ் குழுவினர் தாக்குதலை மேற்கொண்ட பொழுது, வான்வழி, கடல்வழி, தரைவழித் தாக்குதல்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இராணுவ மொழியில் இதனைப் 'பல்லூடகத் தாக்குதல்' என்று அழைப்பார்கள். இஸ்ரேலின் அதிநவீன இரும்புக் குவிமாடப் பாதுகாப்புகளை *(Iron Dome Defences)* திணறடித்த பாரிய ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடுக்க முன்னர், ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி, தமது முதற்கட்ட தாக்குதல்களை ஹமாஸ் குழுவினர் தொடுத்திருந்தார்கள்.

இவ்வாறான தாக்குதல்கள் 'வடிவமைத்தல்' தாக்குதல்கள் *(Shaping defences)* என அழைக்கப்படுகின்றன. அதாவது ஹமாஸ் தமது அடுத்த கட்டமாக, தாம் நேரடியாக இஸ்ரேலுக்கு நுழைவதற்கு முன்னர் மேற்கொண்ட தாக்குதல்களே இவ்வாறு அழைக்கப்படுகின்றன.



அதனை அடுத்து. ஹமாஸ் படைகள் இஸ்ரேலுக்குள் ஊடுருவி, பல திசைகளிலிருந்து இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டு, இஸ்ரேலின் இராணுவ இலக்குகளைத் தாக்கியதுடன், இஸ்ரேலிய சிப்பாய்களைக் கொன்று, சிறைப்பிடித்தது மட்டுமல்லாமல் அவர்களது இராணுவத் தளபாடங்களையும் கைப்பற்றிச்சென்றார்கள்.

இச்செயற்பாடுகளிலே உளவியல் ரீதியிலான ஒரு தாக்குதலையும் அவர்கள் முன்னெடுத்திருந்தார்கள். இஸ்ரேலின் எல்லைப் புறங்களில் வாழ்ந்த யூதக் குழுமங்கள் மீதும் இசைக் கச்சேரியில் பங்குபற்றியவர்கள் மீதும் தாம் மேற்கொண்ட தாக்குதல்களை ஒலிப் பதிவு செய்ததுடன், அதனை ஒலிபரப்பவும் செய்தார்கள். அதுமட்டுமன்றி, இஸ்ரேலிய சிப்பாய்களையும் பொதுமக்களையும் கைதுசெய்து காஸாப் பகுதிக்குக் கொண்டுசென்றார்கள்.

**மறைவாக வைக்கப்பட்டிருந்த திட்டமிடல்**

பல மாதங்கள் தொடர்ச்சியாக அரசியல் பிரச்சினைகள் இஸ்ரேலை அதிரவைத்துக் கொண்டிருந்த காலப்பகுதியில், ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல்களுக்கான தமது திட்டங்களை தீட்டியிருக்க வேண்டும்.



அரசியல் ரீதியாக இஸ்ரேல் பிளவுபடுவதற்கான காரணம் பிரதம மந்திரி நெத்தன்யாகு தலைமையில்இயங்குகின்றஇஸ்ரேலின்வலதுசாரி அரசு முன்வைத்த ஒரு சட்டமூலம். இஸ்ரேலை இதுவரை ஆட்சி செய்த அரசுகளில் மிக அதிமாக வலதுசாரித்தன்மை கொண்ட அரசு இந்த அரசுதான். இந்தச் சட்டமூலம் நீதிபரிபாலனக் கட்டமைப்பை வலுவிழக்கச் செய்யும் என்ற அச்சம் எல்லோர் மத்தியிலும் இருந்தது. அந்த அரசை எதிர்த்தவர்கள் தமது வாராந்த ஆர்ப்பாட்டங்களின் போது இந்தக் கருத்தையே முன்வைத்தார்கள். இஸ்ரேல் மக்கள் நடுவில் ஏற்பட்ட இந்தக் குழப்பம் இஸ்ரேலின் புலனாய்வைத் திசைதிருப்பிய பின்னணிச் சத்தமாக *(background noise)* அமைந்தது.



புலனாய்வுத் தகவல்களை இஸ்ரேல் எவ்வாறு சேகரிக்கிறது என்பதை ஆய்வு செய்த ஹமாஸ், இஸ்ரேலுக்குப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறும் மூலங்களை இனங்கண்டு, தாம் செய்து வந்த ஆயத்தங்களை மறைப்பதற்காக இஸ்ரேலின் புலனாய்வாளர்கள் வேறு விடயங்களில் தமது கவனத்தைச் செலுத்தும்படி அவர்களைத் திசைதிருப்பினார்கள்.



இதுவரை கிடைத்த செய்தி அறிக்கைகளின் படி, தமது குகைக் கட்டமைப்புகளில் அதிக கவனம் செலுத்தி, இஸ்ரேலின் சோதனைச்சாவடிகளைக் கடந்து சென்று, அவர்கள் எதிர்பாராத விதத்தில் அவர்கள் மேல் தாக்குதல்களைத் தொடுக்கும் வண்ணம் மிகவும் பாரிய குகைகளினாலான வலைப்பின்னலைக் ஹமாஸ் போராளிகள் கட்டியிருக்கிறார்கள்.

**வியக்கத்தக்க வகையில் தம்மை விருத்திசெய்த ஹமாஸ்**

குகைகளையும் வேறுவகையிலான நிலக்கீழ் நடவடிக்கைகளையும் ஹமாஸ் பயன்படுத்திய காரணத்தினால் தமது தாக்குதலுக்காக அவர்கள் மேற்கொண்ட ஆயத்தங்கள் அனைத்தும் இஸ்ரேலின் புலனாய்வாளர்களுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டது.

பல்வேறு விதமான ஆய்வுகளை ஹமாஸ் மேற்கொண்டிருக்கிறது. இஸ்ரேல் படைகளுடன் தாம் கடந்த காலங்களில் எதிர்கொண்ட அனுபவங்கள், 2002ம் ஆண்டு ஜெனினில் தாக்குதல்களை மேற்கொண்டவர்களின் அனுபவங்கள் என்று பல்வேறு ஆயத்தங்களை மேற்கொண்ட அந்தக் குழுவினர் தாம் புதிதாகக் கண்டுபிடித்த உத்திகளையும் சேர்த்துக்கொண்டனர்.

ஹிஸ்பொல்லாவின் இராணுவக் கட்டமைப்பு, அவர்களது போர் மூலோபாயங்கள் போன்ற விடயங்களையும் ஹமாஸ் கவனத்தில் எடுத்திருக்கிறது.

குறிப்பாக 2014 இல் காஸாவின் மேல் இஸ்ரேல் தாக்குதலைத் தொடுத்த போது,

தொடர்ச்சி 16ஆம் பக்கம்





# இஸ்ரேலின் படைவலிமையை கேள்விக்குறியாக்கிய தாக்குதல்

வேல்ஸ் இல் இருந்து: **அருஸ்**

பல மாதங்களாக இஸ்ரேலின் நகரங்களின் மாதிரிகளை வடிவமைத்து காசா பகுதியில் பயிற்சிகளை எடுத்துவந்த அல் குசாம் பிரிகேட் மற்றும் அல் குவாட் பிரிகேட்டுக்களை சேர்ந்த 1000 ஹமாஸ் படையினரில்; 300 சிறப்பு பயிற்சி பெற்ற படையினர் மோட்டர்களில் இயங்கும் கிளைடர் விமானங்கள், சிறிய நீர் படகுகள், நீரடி நீச்சல் பிரிவு, உந்துருளி படையணி மற்றும் கனரக புல்டோசர்களை நகர்த்திச் செல்லும் படையணி என பல தரப்பட்ட படையணிகள் இல்ரேலின் முன்னரங்க நிலைகளை உடைத்துக் கொண்டு உள்நுழைந்தனர்.



உலகில் மிக அதிக பாதுகாப்பு மிக்க பிர தேசமான காசாவுக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான பகுதிகள் உள்ளன. செய்மதிகள் தொடர்ச்சியாகக் கண்காணிக்க, பல பாதுகாப்பு நிலைககளில் கமெராக்கள் கண்காணிக்க, உணர்திறன் மிக்க கருவிகள் அபாய எச்சரிக்கை எழுப்ப காத்திருக்க, இரவை பகலாக்கும் மின்குமிழ்கள் ஒளிர, எந்த நேரமும் தயார் நிலையில் கோட் - எம்-4 கார்பைன் ரக துப்பாக்கிகள், எம்-136 டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் கவச வாகனங்களுடன் இஸ்ரேலின் சிறப்பு படையினர் காத்திருக்க அந்த பிரதேசம் ஒரு யுத்தசூனிய பிரதேசம் போலவே எப்பவும் காட்சிகளிக்கும்.

காசா பகுதியில் உள்ள படையணி தான் இஸ்ரேலின் மிகச்சிறந்த தாக்குதல் படையணி என முன்னாள் இஸ்ரேலிய இராணுவத்தின் காசா பிரிவு தளபதி அமிர் அவிவ் பைனாஸியல் ரைம்ஸ் இற்கு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் நிலைகளுக்கும் காசா பிரதேசத்திற்கும் இடையில் மனிதர்கள் நடமாட முடியாத பிரதேசமும் உள்ளது. ஆனால் இவற்றை எல்லாம் கடந்து 300 பேர் கொண்ட கொமோண்டோ படையணி நகர்ந்துள்ளது. அதற்கு ஆதரவாக 700 பேர் கொண்ட படையணி தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

முதலில் ஏறத்தாழ 5000 குறுந்தூர ஏவுகணைகளை ஏவிய ஹமாஸ் படையினர் அந்த புகை அடங்கும் முன்னர் தமது நகர்வை முடித்துவிட்டனர், இஸ்ரேலின் அயன் டோம் எனப்படும் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களை ஹமாசின் புதிய ஏவுணை தொழில்நுட்பம் முறியடித்துவிட்டது. அதனை அவர்கள் இரண்டு வழிகளில் செய்துள்ளனர்.



ஒன்று உக்ரைன் படையினர் ரஸ்யா போர் விமானங்களுக்கு எதிராக பயன்படுத்திய போரியல் உத்தி. அதாவது ரஸ்யாவின் எஸ்யூ-24 ரக விமானங்களை நோக்கி 10 இற்கு மேற்பட்ட ஸ்ரிங்கர்ரக ஏவுகணைகளை ஒரே தடவையில் ஏவுவதன் ஊடாக விமானத்தின் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களின் எதிர்த்தாக்குதலில் இருந்து தப்பும் ஒரு ஏவுகணை விமானத்தை தாக்கலாம் என்ற உத்தி.


ஹமாசும் அதனை தான் பயன்படுத்தினர், 5000 ஏவுகணைகளை ஏவும்போது இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களுக்கு ஒரேதடவையில் பெருந்தொகை ஏவுகணைகளை எதிர்கொள்ளும் சக்தி இருக்கவில்லை. அதாவது போதுமான ஏவுகணைகள் இல்லை.

தற்போது இஸ்ரேல் அமெரிக்காவிடம் மேலதிக ஏவுகணைகளை கேட்டுள்ளதும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக அவர்கள் இந்த தடவை பயன்படுத்திய ஏவுகணைகள் முன்னைய ஏவுகணைகளை விட தரமுயர்த்தப்பட்டவை அதாவது இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்பு சாதனங்களை ஊடுருவும் தன்மை வாய்தவை என மத்திய கிழக்கு ஆய்வாளர் ஒருவர் கூறுகின்றார்.



அதேசமயம், ஜாமர்கள் எனப்படும் சாதனங்களை பயன்படுத்தி இஸ்ரேலின் தொலை தொடர்பு சாதனங்களையும் அவர்கள் செயலிழக்க செய்துவிட்டனர். தன்னை சுற்றி என்ன நடக்கின்றது என்பதை இஸ்ரேல் உணர்வதற்கு முன்னரே இஸ்ரேலின் 20 நகரங்களுக்குள் சண்டை மூண்டுவிட்டது. செரேட் பகுதியில் உள்ள காவல்நிலையத்தை கைப்பற்றிய ஹமாஸ் படையினர் 20 இற்கு மேற்பட்ட காவல்துறையினர் சுட்டுக்கொன்றதுடன், பலரை கைது செய்திருந்தனர்.



அதேசமயம் அருகில் இருந்த நகேல் ஒஸ் படைத்தளம் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் படையினர் தளத்தினை அதிரடியாக கைப்பற்றியிருந்தனர். தளத்தின் நாஹால் இலகுகாலாட் படை பிரிகேட்டின் கட்டளை அதிகாரி கேணல் ஜேனாதன் ஸ்ரின்பேர் மற்றும் மேஜர் தர பிரதி கட்டளை அதிகாரி உட்பட 76 இற்கு மேற்பட்ட படையினர் அந்த தளத்தில் கொல்லப்பட்டிருந்தனர். செலிம் பயிற்சித் தளத்தின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் றோமன் கொப்மானும் இந்த தாக்குதலில் காயமடைந்திருந்தார்.



இதனிடையே, அருகில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலில் 260 இற்கு மேற்பட்டவர்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

பேரவலத்தை ... தொடர்ச்சி ...

போராட்டம் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் கை ஓங்கி இருந்ததால் சிங்கள குடியேற்றத்தை அவர்களால் செய்ய முடியாது இருந்து வந்தது ஆனால் 2009 மே 18 வரை மயிலத்த மடு , மாதவண வெட்டை என்பது எந்தவொரு பிரச்சனைகள் இன்றி மேய்ச்சல் நிலமாகவே இருந்து வந்தது

அதன் பிறகு 2019 ம் ஆண்டு புதிய ஜனாதிபதியாக கோத்தபாய ராசபக்ச வந்தபிறகு பிறகு மீண்டும் அந்த முயற்சிகள் மேலோங்கி இருந்தது அதற்கு அப்போது இருந்த கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் இப்போது இருக்கின்றவர் அல்ல அப்போது இருந்த பெண்மணி அதற்கான திட்டங்களை தீட்டி அவரே நேரடியாக அங்கு சென்று குடியேற்றம் செய்வதற்கு தொடர்ச்சியாக வேலைகளை முன்னெடுத்தார்

2019 தொடக்கம் இன்று வரை அவை தொடர்கின்றது பலதடவைகள் கால் நடை வளர்ப்பவர்கள் தாக்கப்பட்டார்கள் அவர்களது கால் நடைகள் சட்டவிரோதமாக கொல்லப்பட்டது 2020 ம் ஆண்டு மார்கழி மாதம் அங்குள்ள புத்த பிக்கு மற்றும் சிங்கள மக்கள் இணைந்து மூன்று நாட்களுக்குள் கால் நடைகளை அங்கிருந்து அகற்றும் படி கால் நடை வழப்பவர்கள் மீது அச்சுறுத்தல் வழங்கினார்கள் இவ்வாறு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் நடைபெற்ற காரணத்தால் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கிடையாது என்பதால்தான் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது



அதன் தீர்ப்பு வந்ததன் பிறகு நாங்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால் மேய்ச்சல் நிலத்தில் வருடம் 12 மாதங்களும் அங்கு கால் நடைகள் மேய்ப்பது அல்ல பத்தாம் மாதம் மானா வாரியம் என்று சொல்லப்படும் பெரும்போக நெல் செய்கை முன்னெடுக்கப்படும் காலங்களில் மூன்று மாதம் மாத்திரம்தான் கால் நடைகள் மேய்ச்சலுக்காக அங்கு கொண்டு செல்லப்படுகிறது இப்போது மேய்ச்சல் நிலங்களில் கால் நடைகளை கொண்டு செல்ல முடியாது விவசாய நிலங்களில் அதற்கான வேலைகள் செய்வதால் இங்கும் கால் நடைகளை வைத்திருக்கவும் முடியாது ஆனால் பாதிப்பு என்னவென்றால் கால் நடை வளர்ப்பவர்கள் பொருளாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது அதை விட கால்நடைகள் தற்போது விவசாய நிலங்களில் உள்ளதால் விவசாயிகள் முற்று முழுதாக பாதிக்க பட்டு உள்ளனர் இதில் விவசாயிகள் மற்றும் கால்நடை வழப்பவர்கள் என இரு பாலரும் முற்று முழுதாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தங்களது பொருளாதார த்தை இழந்து நிக்கிறார்கள் என்பதுதான் வேதனை அளிக்கிறது

## மகாவலி அபிவிருத்தி அதிகார சபை இந்தப் பிரச்சினையில் எவ்வாறான பங்களிப்பை வழங்குகின்றது?

மகாவலி அபிவிருத்தி சபையை எடுத்துக் கொண்டால் அதுவும் இனவாத அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்படுகிறது. ஏன் என்றால் தற்போது பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதியாக உள்ள திரு.சாணக்கியன், திரு. கருணாகரன் மற்றும் யாழ் மாவட்டத்தில் தேசிய பட்டியலில் வந்த திரு. கஜேந்திரன் போன்றவர்கள் மகாவலி அபிவிருத்தி அதிகாரிகள் உடன் அங்கு சென்று ஒரு குறிப்பிட்ட காலத்தில் தீர்வு கிடைக்க வேண்டும் என்று பேசப்பட்டது ஆனால் வழங்கப்பட்ட திகதி அன்று யாரும் வரவில்லை அதில் இருந்து விலகி விட்டார்கள் ஏதோ ஒரு அழுத்தம் காரணமாக அவர்கள் அதற்கான ஒத்துழைப்பு அளிக்க வில்லை அதற்கு மாறாக வேறு மாவட்டங்களில் உள்ள சிங்கள மக்களை குடியேற்றம் செய்வதற்கு அவர்கள் பங்களிப்பு செய்வதாகத்தான் பார்க்க கூடியதாக உள்ளது.

## சிங்களப் பண்ணையாளர்களின் ஆக்கிரமிப்பினால் தமிழ்ப் பண்ணையாளர்கள் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்? அவர்களுடைய வாழ்வாதார நிலை என்ன?

உண்மையில் அங்குள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் 500 தொடக்கம் 700 வரையிலானவர்கள் உள்ளனர் அவர்களது கால் நடைகள் எண்ணிக்கை மூன்று தொடக்கம் நான்கு இலச்சம் வரை உள்ளது இது தமிழர்களுடையது அதனை தவிர இஸ்லாமிய மக்கள் எல்லை புறத்தில் உள்ள சிங்கள மக்களின் கால் நடை கள் கூட அந்த மேய்ச்சல் நிலத்தில் மேய்கின்றது

இதில் பிரதானமாக தமிழ் பண்ணை யாளர்கள் 150 வருடங்களுக்கு மேலாக அங்கு கால் நடைகளை வளர்த்து வருகின்றனர். அதன் ஊடாகவே மட்டக்களப்பில் அதிகளவான பால் உற்பத்தி பொலனறுவை மாவட்டத்திற்கு ஏற்றப் படுகின்றது



இதில் வெறுமனே பண்ணையாளர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை நேரடியாக அவர்கள் பாதிக்கப்பட்டாலும் அதை விட அவர்களிடம் இருந்து பாலைப் பெற்று தயிர் வேறு வகைகளில் உணவு உற்பத்தி செய்யும் சிறு கைத்தொளில் நபர்கள் அவர்களது குடும்ப உறவுகள், பிள்ளைகளது கல்வி என முற்று முழுதாக இவர்கள் அனைவரும் பாதிக்கப்படுகிறார்கள்.

இரண்டாவது நாங்கள் தாயக விடுதலைக்காக போராடிய ஒரு இனம் இதில் பார்க்க வேண்டியது தாயகம் என்பது நிலத்தோடு தொடர்பு பட்டது. இதனை மேய்ச்சல் தரையாக மாத்திம் சிலர் பார்க்கின்றனர். அதற்கு மேலாக இது ஒரு நில ஆக்கிரமிப்பு இதனை மட்டக்களப்பு போராட்டமாகவோ அல்லது கிழக்கு போராட்டமாகவோ நாங்கள் பார்ப்பதை தவிர்த்து இது வடகிழக்கு தாயகத்தின் நிலத்தை அபகரிக்கின்ற எதிர்ப்பு போராட்டமாக தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள், புலம்பெயர் தமிழ் மக்கள் பார்க்கவேண்டும்

நாங்கள் வடக்கு கிழக்கு என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளது போராட்டம் 2000. நாட்கள் கடந்து செல்வதைப் போன்றுதான் இந்த மயிலத்த மடு மேய்ச்சல் நிலத்தை அபகரிக்கின்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான போராட் டமாக இது இருப்பது உண்மை

## தமிழ்ப் பண்ணையாளர்களின் நீதிக்கான போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு தமிழ்க் கட்சிகளிடம் உள்ள திட்டம் என்ன?

நிச்சயமாக இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற தேசிய பரப்பில் அரசியல் செய்யும் கட்சிகள் மாத்திரம்தான் இதில் ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த மேய்ச்சல் நில போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றோம் சிலர் நினைப்பது வெறுமனே சித்தாண்டி சந்தியில் வீதி ஓரமாக யாருக்கும் இடையூறு இன்றி போராட்டம் நடாத்தி வருகிறார்கள் என்று இங்குள்ள இராஜாங்க அமைச்சர், அரச அதிகாரிகள், ஏனைய மக்கள் கருதி செல்கின்றனர் ஆனால் பண்ணையாளர்கள் இந்த போராட்டத்தை முன்னகர்த்தி வேறு கட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று நேற்று ஊடகத்தில் பண்ணையாளர்களால் கூறப்பட்டது இந்த கவனயீர்ப்பு என்பது அரசாங்கத்தின் கவனத்தில் சென்று அதரக்கான தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது தான் உண்மை

ஆனால் அதனை அரசாங்கம் அரச உத்தியோகஸ்தர்கள் கண்டு கொள்ளாத போது இதனை மட்டக்களப்பு மாவட்ட அரச அலுவலகம் வரை கொண்டு செல்ல வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் கூறவில்லை பண்ணையாளர்கள் கூறுகின்றார்கள் அவ்வாறான ஒரு போராட்டத்தை பண்ணையாளர்கள் மேற்கொள்வார்கள் என்று நான் நினைக்கின்றேன்

## இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறான ஒரு தீர்வை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

தற்போது விவசாய விதை நிலங்கள் பெரும்போக நெல் செய்கை முன்னெடுப்பதற்கு விவசாயிகளால் வேலைகள் முன்னெடுத்து வரும் நிலையில் மயிலத்த மடு மேய்ச்சல் நில த்திற்கும் கொண்டு செல்ல முடியாது உள்ளது இங்கு மாத்திரம் இல்லை பட்டிப்பளை பிரதேச பிரிவில் உள்ள கெவலியான் மடுவிலும் கூட மேய்ச்சல் நிலங்கள் சோளம் உற்பத்திக்காக வழங்கப்பட்டு உள்ளது ஆகவே முதலாவது கால் நடைகளை கொண்டு செல்வதற்கு மேய்ச்சல் நிலத்தை விட்டு அவர்கள் வெளியேற வேண்டும்

இரண்டாவது செய்யப்படவேண்டியது நீதி மன்ற தீர்ப்பை நடைமுறை படுத்துவது இதனை செய்யவேண்டியவர்கள் காவல் துறையினர் மற்றும் அதன் சார் அதிகாரிகள் ஆனால் அவ்வாறு அங்கு ஒரு வேலைத் திட்டம் கூட இடம்பெறவில்லை அதனை நேரில் சென்றும் நாம் பார்வையிட்ட போது அவர்கள் அங்குள்ள நீர் ஓடைகள் மற்றும் மேய்ச்சல் நிலத்தை உழுது நெற் செய்கையில் ஈடுபடுவதை காணமுடிகிறது அப்படி அதில் அவர்கள் பயிர் செய்வார்களாக இருந்தால் நிச்சயம் அங்கு கால் நடைகள் கொண்டு செல்ல முடியாது

ஆகவே இதற்கான தீர்வு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மாத்திரம் முடிவெடுத்து அதனை நடைமுறை படுத்த வேண்டும் அங்குள்ளவர்களை உடனடியாக அகற்ற வேண்டும் அதனை செய்யும் வரை அந்த போராட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கு அல்லது சர்வதேச மட்டத்தில் இதனை கொண்டு செல்வதற்கு தமிழ் தேசிய பரப்பில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றுதான் நாங்கள் எதிர் பார்க்கின்றோம் .

• • •

## மேச்சல் தரை ... தொடர்ச்சி ...

சொல்லுகின்றார்கள்.

இந்த மண்டானை ஆற்றினை கிழக்குப் பக்கம் இருந்து பார்க்கும் போது இந்த ஆற்றின் வலது பக்கம் மட்டக்களப்பு மாவட்டம் இடது பக்கம் இருப்பது அம்பாறை மாவட்டம். இந்த ஆற்றின் இடது பக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதே பெரும்பான்மையினத்தவரால் திவுல் பொத்தான என்று சொல்லப்படும் கிராமம். திவுல்பொத்தான என்று சொல்லப்படும் கிராமம் அம்பாறை மாவட்டத்திற்குரியது. அது மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் இருப்பதான எந்த ஒரு ஆவணமும் இல்லை. இது அம்பாறை மாவட்டத்திற்குள் இருந்த கிராமம்.

இவ்வாறாக அந்த அம்பாறை பகுதிக்குள் பல்லாயிரம் ஏக்கர் அளவில் பரந்த காடு அற்ற பகுதி இருக்கின்றது. இதற்குள் எவரும் பயிர் செய்கையில் ஈடுபடுவதில்லை. இதேவேளை கால்நடை வளர்ப்பாளர்களும் மாடுகளை அப்பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப் போவதும் இல்லை. ஏனெனில் ஆற்றைக் கடந்து அவர்கள் செல்லப்போவதில்லை. அது வேறு மாவட்டம், வேறு காட்டுப்பகுதி, வேறு மாவட்ட வனஇலாகா பகுதி. இதனால் அங்கு மாடுகளை மேய்ப்பதற்குச் சாத்தியம் இல்லை.

எனவே பண்ணையாளர்கள் மாடுகளை மேய்க்கும் சுமார் ஐந்தாயிரம் ஏக்கரினுள்ளும் பண்ணையாளர் சங்கத்தின் கணக்கின் பிரகாரம் 972 பண்ணையாளர்களும் சுமார் இரண்டரை இலட்சம் கால்நடைகளை மேய்ப்பதாகவே சொல்லுகின்றார்கள். தற்போது அந்த மேய்ச்சற்தரை என்பது தனியவே ஏறாவூர்ப்பற்றுக்குரிய பண்ணையாளர்கள் மாத்திரம் மாடுகள் மேய்க்கும் இடமும் அல்ல. இதில் கோரளைப்பற்று, கோரளையப்பற்று மேற்கு, ஆயித்தியமலை, வவுணதீவு என்ற அனைத்து இடங்களிலும் உள்ள பண்ணையாளர்களும் மேய்க்கலாம். இதேவேளை அம்பாறை, பொலனறுவை மாவட்ட பண்ணையாளர்களும் கால்நடை மேய்ப்பில் ஈடுபடுகின்றார்கள். இதில் எந்தவொரு இன வேறுபாடும் இல்லாமல் மேய்ச்சற்தரையாக பாவித்துக் கொள்ளலாம்.

இதேநேரம் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் நெல் உற்பத்தியில் மூன்றாவது மாவட்டமாகத் திகழ்கின்றது. தற்போது விதைப்பு காலம் இந்த நேரத்தில் பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை வயல் பகுதிகளில் இருந்து அகற்றாமல் விடுவார்களாக இருந்தால் பண்ணையாளர்களுக்கும், மாவட்ட விவசாயிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படும். கால்நடைகள் பயிர்களை அழிக்கும். அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இது தொடர்பான முறைப்பாடுகள் அதிகமாகப் பதிவாகும். கிரான், வந்தாறுமூலை கரடியனாறு, வவுணதீவு போன்ற கமநல நிலையங்களுக்குட்பட்ட வயற் பிரதேசங்களுக்கு இத்தகு கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்பு இடம்பெறும்.

இதற்கும் மேலாக முறையான முறையில் மேய்ச்சற் தரை வழங்கப்படாததன் காரணத்தினாலேயே பண்ணையாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் பால் உற்பத்திகளின் அளவு குறைந்து காணப்படுகின்றது. இவர்களுக்கு சரியான முறையில் மேய்ச்சற் தரையினைக் கொடுத்தால் கால்நடைகள் மூலம் அவர்களின் பால் உற்பத்திகளை தற்போதுள்ள அளவை விட மேலும் பல மடங்கு அதிகரிக்க முடியும். அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் நூறு வீத இறைச்சித் தேவை மற்றும், அயல் மாவட்டங்களான அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களின் இறைச்சித் தேவையினையும் இதன் மூலம் நிவர்த்திக்க முடியும்.

தற்போது கால்நடைகளுக்கான மேய்ச்சற் தரையைக் கொடுத்து கால்நடைகளை உரிய இடத்திற்கு அனுப்பாமல் விடின் மாவட்டத்தின் நெல் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும். மயிலத்தமடுவில் அத்துமீறிச் செய்கை பண்ணும் உற்பத்தியின் அளைவை விட மாவட்டத்தின் உற்பத்தி அளவு பல மடங்கு அதிகமாகும். எனவே ஒரு பாதிப்பு ஏற்படும்போது மயிலத்தமடு அத்துமீறிய செய்கையாளர்களின் உற்பத்தியை விட எத்தனையோ மடங்கு பாதிப்பினை இங்குள்ள விவசாயிகள் அனுபவிப்பார்கள்.

எனவே மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்செய்கையாளர்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படின் அது கால்நடைகள் வளர்ப்பாளர்களுக்கு மாத்திரமல்ல மாவட்டத்தின் விவசாயச் செய்கையிலும் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும். இங்கு ஏற்படுத்தப்படும் பாதிப்பினை விட மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்களினால் உற்பத்தி செய்யப் படும் உற்பத்தி அளவு மிக மிக குறைவாகும். இதே நேரம் மாடுகளை மேய்க்கக் கூடிய மேட்டு நில வசதியும் மயிலத்தமடுவிலேயே இருக்கின்றது. காட்டுக்குள் சென்று மாடுகளை மேய்க்க முடியாது. காட்டுக்குள் இலைகள் இருக்கும் புல் இருக்காது. இலைகளை மாடுகள் அதிகம் சாப்பிடாது.

மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்கள் காலத்துக்கு வருவதும் போவதுமே பிரச்சனை. அதிலும் சுமார் பதினைந்து இருபது குடும்பங்கள் மட்டில் நிரந்தரமாக அங்கு இருக்கின்றார்கள். இவர்களின் ஊடாக ஐந்தில் இருந்து இருநூறாக மாறி தற்போது ஆயிரத்தில் வந்து நிற்கின்றது. இதுவே கடந்த இரண்டு வருடங்களுக்குள் இடம்பெற்றது. கடந்த 2020ல் அவர்கள் இறுதியாக பயிர்செய்த எல்லை தொப்பிலகல் மலை எல்லையாகும். அது வன இலாகாவிற்குச் சொந்தமானது. இவ்வாறான நிலைமைகளில் அங்கு பயிர்ச்செய்கையும் செய்யலாம், கால்நடைகளும் வளர்க்கலாம் என்பது சாத்தியமில்லாத விடயம்.

இப்பகுதியானது 1930 காலப்பகுதிகளில் வன இலாகாவிற்கு உரித்தானதாக சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 1978களின் பின்னர் மகாவலிச் சட்டம் வந்ததும் வன இலாகாவிற்குரிய பகுதிகளை மகாவலி அதிகார சபைக்குள் உள்ளெடுத்து சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மகாவலி சட்டத்தின் படி இப்பகுதிகளில் வன இலாகாவின் சட்டம் வலுவற்றதாக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான நடைமுறைகளுக்கு மத்தியில் பண்ணையாளர்கள் தங்களின் கால்நடைகளை மேய்ப்பதற்கான இடத்தினைக் கோரி தற்போது 29 நாட்களுக்கும் மேலாக தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்கள். இவர்களுக்கான தீர்வு கிடைக்குமா என்ற கேள்விகளும், ஏக்கங்களும் பண்ணையாளர்களுக்கு மாத்திரமல்லாமல் மாவட்டத்தின் ஒவ்வொரு குடிமகனுக்கு எழுந்திருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினைப் பிரதிநித்துவப்படுத்தும் மூன்று அரசியல்வாதிகளும், தேசியம் சார்ந்த இரண்டு அரசியல்வாதிகளும் இது தொடர்பில் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தாலும், பண்ணையாளர்களுக்கான தீர்வு இன்றுவரைக்கும் எட்டப்படவில்லை. எது எவ்வாறாக இருந்தாலும் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயிகளும் சேர்ந்தே இந்தப் பிரச்சனை யினூடாகப் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்பது தெட்டத்தெளிவாக விளங்குகின்றது.

எனவே இந்தப் பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு ஜனாதிபதி உட்பட அரசாகம் ஒரு தீர்க்கமான முடிவினை வழங்காமல் விட்டால் கிழக்கில் பொருளாதார அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயிகள், கால்நடை பண்ணையாளர்கள் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்குள் முகங்கொடுத்து அது மாகாணத்தின் மட்டுமல்ல நாட்டின் பொருளாதாரத்திலும் பாரியதொரு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதே உண்மை.

• • •

## இஸ்ரேலின் படை ... தொடர்ச்சி ...

கொல்லப்பட்டிருந்தனர். அது மட்டுமல்லாது 20 நகரங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் இதுவரை கிடைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 1300 பேர் கொல்லப்பட்டதுடன், 3500 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களில்ஏறத்தாழ 600பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களில் 15 இற்கு மேற்பட்ட நாடுகளை சேர்ந்தவர்கள் உள்ளனர். அதில் பிரித்தானியாவைச் சேர்ந்த 15 பேர் அமெரிக்காவை சேர்ந்த 25 பேரும் அடங்கும்.

இந்த மோதல்களில் ஹமாஸ் அமைப்பு 120 பேரையும், இஸ்லாமிக் ஜிஹாத் அமைப்பு 30 பேரையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இதுவரையில் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கைகளை வெளியிட இந்த அமைப்புக்கள் மறுத்துள்ளன.

இந்த நிலமையை எதிர்பார்க்காத இஸ்ரேல் பதில் தாக்குதலை எங்கிருந்து ஆரம்பிப்பது, எங்கு நடத்துவது என்று நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர் இஸ்ரேலிய படையினரும் மக்களும் வரலாறுகாணாத இழப்புக்களைசந்தித்துவிட்டனர்.

48 மணிநேரமாக 7 இற்கு மேற்பட்ட இடங்களில் சண்டைகள் தொடர்ந்து இடம்பெற்றிருந்தன.

ஹமாஸ் படையினரின் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் இஸ்ரேலின் நவீன போர் டாங்கியை குண்டு வீசி தகர்த்ததும். பெருமளவான டாங்கிகள் மற்றும் கவசவாகனங்களை கைப்பற்றிய ஹமாஸ் படையினர் அவற்றில் சிலவற்றை எடுத்துச் சென்றதுடன், பலவற்றை குண்டுவைத்து தகர்த்திருந்தனர்.

50 வருடங்களின் பின்னர் இஸ்ரேல் சந்தித்த மிகப்பெரும் இழப்பு இது. படைத்துறை ரீதியான இழப்புக்களை விட, இஸ்ரேலின் படைத்துறை மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விம்பம் உலகில் உடைக்கப்பட்டுள்ளது. மொசாட் என்ற புலனாய்வுக் கட்டைப்பின் முற்றான தோல்வியே இந்த தாக்குதல். 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் இடம்பெற்ற இரட்டைக் கோபுர தாக்குதலில் அமெரிக்காவின் புலனாய்வுத்துறை சந்தித்த தோல்வி போன்றதே இது.

இஸ்ரேலின் மிகச்சிறந்த படையணிகள் நேரடி மோதல்களில் தோல்வியை சந்தித்தும் உலக அரங்கில் மிகப்பெரும் சேதத்தை மேற்குலகத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. அதாவது ஹமாஸ் படையினரின் பயிற்சிகள், தாக்குதல் உத்தி மற்றும் தாக்குதலை ஒருங்கிணைத்த விதம் என்பன பல படைத்துறை ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ரஸ்யாவின் படையினரையும் அதன் ஆயுதங்களையும் உலக அரங்கில் தரம்குறைவாக காண்பிப்பதற்கு உக்கிரைனை வைத்து மேற்குலகம் மேற்கொண்ட நடவடிக்கையை இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதல் பூமராங் மாதிரி திருப்பிவிட்டுள்ளது.

இஸ்ரேல் பதில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. 300,000 படையிரை திரட்டி தரை தாக்குதலுக்கு தயாராகி வருகின்றது. 365 சதுர கி.மீ பரப்பளவில் உள்ள 3 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட காசா மீது பல நூறுதடவை வான் தாக்குதல்களை எப்-16 விமானங்கள் மேற்கொண்டுள்ளன. 1600 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 6000 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும்முள்ளனர்.

கடந்த 16 வருடங்களாக தனிமைப்படுத்தப்பட்ட அந்த மக்கள் ஏற்கனவே 5 பெரும் போர்களின் வலிகளை தாங்கியவர்கள். தற்போதும் அவர்கள் மிகப்பெரும் அவலத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர்.

• • •

## மாற்றாந்தாய் ... தொடர்ச்சி ...

1976 இல் நிகழ்ந்த 'இலங்கை போஷாக்கு அளவீடு' கிராமிய சிறுவர்களைவிட தோட்டப்புற சிறுவர்களே பெருமளவு நீடித்த போஷாக்கின்மையாலும், குறை போஷாக்கினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக வலியுறுத்தியது. உலக சுகாதார நிறுவனம் பல சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட ஆய்வுகளும் மலையக மக்களின் பல்வேறு பின்தங்கிய வெளிப்பாடுகளுக்கு சான்றாக அமைந்தன.

பெருந்தோட்ட மக்களின் சமூக, பொருளாதார நிலையைப் பற்றி ஆராய்வதற்கென 1992 ம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அக்குழு மலையக மக்கள் பின்வரும் விடயங்களில் பின்தங்கி இருப்பதாக சுட்டிக்காட்டி இருந்தது. இதற்கேற்ப குடியுரிமை, தொழில் வாய்ப்புகள் , கல்வி, தொழிற்பயிற்சி, வீட்டு வசதியும் சுகாதாரமும்,சமூகநலன் பேணல், மின்சார வசதி,தொடர்பாடல் வசதிகள், சமூக, கலாசார மேம்பாடு, விளையாட்டு பொழுதுபோக்கு என்பவற்றுக்கான வசதிகள், பிரதான தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்புகள் என்பவற்றில் மலையக மக்கள் பின்தங்கிக் காணப்படுவதாக குழு சுட்டிக்காட்டி இருந்தது.

எனினும் குழுவின் அறிக்கை எந்தளவுக்கு சாதக விளைவுகளை இம்மக்கள் சார்பில் ஏற்படுத்தி இருந்தது என்பது கேள்விக்குறியாகும். மலையக மக்களின் அபிவிருத்தி கருதி முன்வைக்கப்பட்ட ஐந்தாண்டு மற்றும் பத்தாண்டு திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களும் கிடப்பில் போடப்பட்டதையே அவதானிக்க முடிந்தது.

மலையக மக்கள் இந்நாட்டு ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டும், பிரச்சினைக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படாது இழுத்தடிக்கப்பட்டும், உரிமைகள் மழுங்கடிக்கப்பட்டும் வந்த நிலையில் ஆட்சியாளர்கள் மீதான அதிருப்தியே மலையக மக்களிடம் தலைதூக்கியது. மலையக அரசியல்வாதிகளும் அவ்வப்போது தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வந்துள்ளனர். இந்நிலையில் மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் முன்வைத்து தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகள் தொடர்பில் கருத்து வெளிப்பாடுகள் அதிகரித்து வந்தன. இதற்கேற்ப மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதற்கான முன்வைப்புக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அறிக்கையில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன. பேரவையின் இவ்வருடத்துக்கான அறிக்கையில் மலையக விவகாரம் குறித்து குறிப்பிடப்படாமை குறைபாடாகும் என்று ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரூ பிரன்ச் ஏற்றுக்கொண்டுள்ளதோடு இவ்விவகாரம் எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தொடரில் பெருந்தோட்ட மக்களின் 200 வருடகால கசப்பான வரலாறு,வாழ்க்கை முறை மற்றும் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பிலும் விசேடமாக கலந்துரையாடியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்திருக்கின்றார். மேலும் இக் கூட்டத்தொடரில் பிறநாட்டினுடைய தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளிடமும் மலையக மக்கள் சார்பாக பல விடயங்களை முன்வைத்திருப்பதாகவும் வடிவேல் சுரேஷ் தெரிவித்திருக்கின்றார். ஐ.நா.பொதுச்சபையின் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷும் சென்றிருந்தமை தெரிந்ததே.

இதேவேளை மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குஐக்கியஇராச்சியத்தின்பங்களிப்பு மிகவும் அவசியமாகும். அதற்கான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று பிரித்தானியாவின் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டனிடம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அண்மையில் வலியுறுத்தி இருந்தமையும் நோக்கத்தக்கதாகும். எவ்வாறெனினும் இலங்கையின் ஆட்சியாளர்களை அல்லது சர்வதேசத்தை வலியுறுத்தி மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசரமும் அவசியமாகும்என்பதே உண்மை.

• • •

## தனது சிங்கள ... தொடர்ச்சி ...

என்பதனைகண்டுகொள்ளக்கூடிய வழிவகைகளை தெளிவுபடுத்தியுள்ளன.

அடுத்ததாக நாம் இனப்படுகொலையை இனச்சுத்திகரிப்பிலிருந்து தெளிவாக வேறுபடுத்திப்பார்க் வேண்டியவர்களாகின்றோம்.

ஏனெனில் எமது அன்றாட நடவடிக்கைகளில் கூட இவ்விரு சொற்களையும் ஒன்றிற்கு பதிலாக மற்றையதைப் பாவிப்போமானால் நாமே எம்மீது நிகழ்ந்த இனப்படுகொலையை மறுதலிப்பவர்களாக மாறிவிடுவதைக் காணலாம்.

**எனவே இனச்சுத்திகரிப்பென்றால் என்ன என்பது பற்றி ஆராய்வோம்.**

இனப்படுகொலைக்கும் இனச்சுத்திகரிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டை 'இனமொன்றை இல்லாதொழிக்க முற்படுபவரின் நோக்கத்தைக்' கொண்டே பிரித்தறிய முடியும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஒரே இனத்தவரைக்கொண்ட தூயதேசமொன்றைக் கட்டிக் கொள்ளவிரும்பும் தேசியவாதிகள் அதனை செயற்படுத்து வதற்காக தமது கைகளில் எடுக்கும் முதலாவது வன்முறை ஆயுதமே இனச்சுத்திகரிப்பாகும்.

இனச்சுத்திகரிப்பானது பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் தனியொரு பன்னாட்டுக் குற்றமாக வகைப்படுத்தப்படவில்லை. இதனால் இனச்சுத்திகரிப்பென்றால் என்ன என்பது நடைமுறைவரைபுகளில் எங்கும் மிகத் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் வல்லுனர்களின் ஆணைக்குழு ஒன்றே முதன்முதலில் இனச்சுத்திகரிப்பை வரையறை செய்தது.

முன்னாள் யூகொஸ்லாவியக் குடியரசில் நிகழ்ந்த சர்வதேச மனிதாபிமானச்சட்ட மீறல்களை ஆராய நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் வல்லுனர்களின் ஆணைக்குழு இனச்சுத்திகரிப்புத் தொடர்பாக வியாக்கியானங்களை வரைந்தது. அவ்வரைபானதுசில புவியியற் பிரதேசங்களில் வாழும் இன அல்லது மதக் குழுவை சார்ந்த மக்களை வன்முறைகளைக் கட்டவிழ்த்தோ, அல்லது அவர்களுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை எழுச்சியுறச்செய்தோ அப்புவியியற் பிரதேசங்களில் இருந்து அவர்களை அகற்றும் நடவடிக்கையைத் தமது திட்டமிட்ட கொள்கையாக மற்றொரு இன அல்லது மதக் குழுவைச் சார்ந்தவர்கள் கொண்டிருத்தல் இனச் சுத்திகரிப்பு எனக் குறிப்பிட்டது.

இனச்சுத்திகரிப்பின் போது சுத்திகரிக்கப்படும் இனத்தில் உள்ள பெறுமதிமிக்கவர்களை கொன்றுவிடுதலின் ஊடாக அவ் இனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முயற்சி நடைபெறுவதைக் காணலாம். ஓரினப் பிரிவைக் கொண்ட தேசமொன்றைகட்டியெழுப்ப விரும்பும் தேசியவாதிகள் தமது தேசத்தில் சிறுபான்மையாக வாழும் ஏனைய இனக்குழுக்களை ஒட்டு மொத்தமாக துடைத்தழிக்க விரும்புவார்களாயின் அந்நடவடிக்கை பன்னாட்டுக் குற்ற வரம்புக்கு உள்ளாகிவிடும். எனவே துடைத்தழிக்கும் நடவடிக்கையினைக் கைவிட்டு அச் சிறுபான்மையினத்தவர்களில் பெரும்பாலானவர்களை கொன்று விடுவதன் ஊடாக அவ்வினத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்றசாத்தியம்காணப்படும்போதுநிகழ்த்தப்படும் படுகொலைகள் இனச்சுத்திகரிப்பாகக் கொள்ளப்பட வேண்டும்.

அவ்வகையில் இனச்சுத்திகரிப்பிற்கான மிகச்சிறந்த உலக உதாரணமாக பொஸ்னியப் படுகொலைகளை கருதலாம். ஏனெனில் முதன் முதலில் பொஸ்னியப் படுகொலைகளின் போதே இனச்சுத்திகரிப்பு என்ற வார்த்தை சங்கேதச் சொல்லாக அங்கு பயன்படுத்தப்பட்டது என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சர்வதேச சட்டப்பேராசிரியர் வில்லியம் ஸ்கபாஸ் - *Prof. William Schabas*- இனச்சுத்திகரிப்பை இனப்படுகொலையில் இருந்து வேறுபடுத்திப் பேசுகின்றார். இனமொன்றின் சனத்தொகையினை இடம்பெயர்க்க முனைவது இனச்சுத்திகரிப்பாக இருக்கும் பொழுது அச்சனத்தொகையினை முற்றுமுழுதாகத் துடைத்தழிக்க முற்படுவது இனப்படுகொலையாக இருக்கும். எனினும் தர்க்கரீதியாக எம் சிந்தனைக்கு எட்டாதவகையில் இவ்விரு கோட்பாடுகளும் ஒருங்கிணைந்தவையாக இருக்கும் என்பதே உண்மை என்றும் இனச்சுத்திகரிப்பானது இனப்படுகொலை நிகழப் போகின்றது என்பதற்கான அபாய எச்சரிப்பு என்பதுடன் இனப்படுகொலையே இனச்சுத்திகரிப்பை செய்ய எண்ணங்கொண்டவரின் இறுதி நடவடிக்கை என்றும் தெரிவித்தார். இனப்படுகொலைச் செயன்முறையின் ஓர் படியாக இனச்சுத்திகரிப்பு காணப்படும் என்பதையே பேராசிரியர் வில்லியம் ஸ்கபாஸ் இதன் மூலம் எதிர்வு கூறுகின்றார்.

அவரது கருத்தின் படி இனப்படுகொலையானது ஒரு படிமுறை வளர்ச்சியாக இருக்கும் என்பது புலனாகின்றது அல்லவா? அவ்வாறாயின் இனப்படுகொலையின் படிமுறைகள் எவையென்பதை அடுத்த வாரம் பார்ப்போமா?

**தொடரும்**

## கடும் இராஜதந்தி ... தொடர்ச்சி ...

இராகவன் மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவது கோபால் பாக்லே ஆகியோர் வரவேற்றிருந்தனர்.

இலங்கைக்கு வரவுள்ள சீனாவின் ஆய்வுக்கப்பலை நிறுத்து வதற்கு இந்தியா கடும் முயற்சிகளைமேற்கொண்டபோதும்அதுகைகூடவில்லை. எனினும் இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்க அதன் வரவை இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் வளை கூட்டமைப்பு மாநாடு முடிந்த பின்னர் இல ங்கை அரசு பிற்போட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கப்பலின் பயணம் ஒத்திவைக்கப்பட்ட பின்னரே ஜெயசங்கர் இலங்கை வந்துள்ளார்.

இதனிடையே, இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் வளை கூட்டமைப்பு நாடுகளின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுள்ளது. இந்த அமைப்பில் இலங்கை 1997 ஆம் ஆண்டு இணைந்திருந்தது.

## இஸ்ரேலின் ... தொடர்ச்சி ...

பெற்றுக்கொண்ட அனுபவங்கள் உட்பட கடந்த காலங்களில் இஸ்ரேல் படைகளை எதிர்கொண்ட போது பெற்றுக்கொண்ட அனுபவங்கள், நகரத்திலே எவ்வாறு போர் புரிவதென்றும், தேவைக்கேற்றபடி வெடிபொருட்களை எப்படிப் பயன்படுத்துவது, குகை வலைப்பின்னலை எப்படிப் பயன்படுத்துவது, உளவியல் ரீதியான தாக்குதல்களை எப்படி மேற்கொள்வது, சமச்சீரற்ற தாக்குதல்களை எவ்வாறு தொடுப்பது என்று பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து ஹமாஸ் குழுவினர் தாக்குதலுக்கான தமது ஆயத்தங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்.

### ஜெனினில் கற்றுக்கொண்ட பாடங்கள்

அடக்குமுறைக்கான பாலஸ்தீன மக்களின் அடையாளமாக இதுவரை திகழ்கின்ற 2002ம் ஆண்டில் நிகழ்ந்த ஜெனின் சண்டையில், தமது போராளிகள் பயன்படுத்திய உத்திகளிலிருந்து கற்றுக்கொண்ட நுண்ணறிவுகளையும் ஹமாஸ் உள்வாங்கியிருக்கிறது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையின் படி, ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் படையினர் மேற்கொண்டிருந்த தாக்குதலில், பெண்கள் சிறுவர்கள் உட்பட 52 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அந்தத் தாக்குதலின் போது, 23 இஸ்ரேல் படையினர் கொல்லப்பட, மேலும் பல படையினர் காயமடைந்தார்கள்.

இஸ்ரேல் படையினருக்கு அதிக இழப்பை ஏற்படுத்தக்கூடிய வகையிலும், இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களைக் குழப்பவும், தேவைக்கேற்றபடி உருவாக்கப்படும் வெடிக்கும் சாதனங்களை *(Improvised Explosive Devices)* எவ்வாறு செயற்றிறன் மிக்க வகையில் பயன்படுத்துவது என்பது ஜெனின் சண்டையில் ஹமாஸ் கற்றுக்கொண்ட மிக முக்கிய பாடமாக இருக்கலாம். தேவைக்கேற்றபடி உருவாக்கப்படும் வெடிக்கும் சாதனங்களை அதிக செலவின்றிச் செய்துகொள்ளலாம் என்பது மட்டுமன்றி, சமச்சீரற்ற தாக்குதலில் அவை மிகவும் பெறுமதியான உபகரணங்களாகும். இஸ்ரேலின் இரா ணுவ வாகனங்கள், ரோந்து நடவடிக்கைகள், சோதனைச்சாவடிகள் போன்றவற்றைத் தாக்குவதற்கு ஹமாஸ் இவ்வாறான வெடிக்கும் சாதனங்களை தமது தாக்குதல்களில் பயன்படுத்திவருகிறார்கள்.

காஸாவில் ஒரு தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் படையினர் தொடுக்கும் பட்சத்தில், இவ்வாறான உத்திகளை ஹமாஸ் பயன்படுத்துவதை நாம் நிச்சயமாகப் பார்க்கலாம்.

மூலோபாய ரீதியிலான நகர்வுகளை மேற்கொண்டு எதிரியைத் திணறடித்தல், போராளிகளையும் ஏனையவற்றையும் விநியோகிப்பதற்கு குகை வலைப்பின்னலை எவ்வாறு பயன்படுத்தலாம், இஸ்ரேலிய படையினருக்குத் தெரியாமல் தமது நகர்வுகளை எப்படி மேற்கொள்வது அதிரடித் தாக்குதல்களை எவ்வாறு மேற்கொள்வது போன்ற இன்னோரன்ன விடயங்களையும் ஜெனின் தாக்குதலில் இருந்து ஹமாஸ் கற்றுக்கொண்டிருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

### சமமற்ற போட்டி

மேற்குறிப்பிட்ட அனைத்துக் காரணங்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டால் கூட, அதி நவீனத்துவம் கொண்ட கனரக ஆயுதங்களையும் விமானத்தாக்குதல் சக்தியையும் கொண்ட ஒரு இராணுவத்தோடே ஹமாஸ் போர்புரிந்து கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் மறந்துவிடலாகாது.



அவ்வாறான கனரக ஆயுதங்களை எதிர்கொள்ள தாமே உருவாக்கிய தேவைக்கேற்ற வகையில் உருவாக்கும் வெடிக்கும் கருவிகள், ராக்கெட்டுகள், மென்ரக ஆயுதங்கள், தாம் தமது பிரதேசத்துக்குக் கடத்திக்கொண்டுவந்து நவீன மென்ரக ஆயுதங்கள் என்பதைத் தவிர ஹமாசிடம் வேறு எதுவும் இல்லை.

நேரடிச் சண்டைகளைத் தவிர்த்து, தமது தாக்குதலின் விளைவுகளை அதிகரிக்கும் பொருட்டு, ஹமாஸ் போராளிகள் பயன்படுத்தும் உத்திகள் முக்கியமானவை. தாக்குதலைத் தொடுத்து விட்டுத் தப்பியோடுதல், எதிர்பாராவகையில் இஸ்ரேல் துருப்புகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளுதல், குறிபார்த்துச் சுடுதல் போன்ற உத்திகளை ஹமாஸ் பயன்படுத்துகின்றது.

அண்மையில் மேற்கொண்ட தாக்குதல் உண்மையில் எந்த இலக்கை அடைய முயற்சிக்கிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. அந்தப்பிரதேசத்திலிருந்து அவர்களுக்குப் பாரிய இராணுவ ஆதரவு கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையேயும், அதே வேளை பாலஸ்தீனத்திலுள்ள பல்வேறு போராளிக் குழுக்களிடையேயும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் முயற்சிகள் ஏற்கனவே தடைப்பட்டிருக்கும் பின்புலத்தில், இவ்வாறான தாக்குதல்கள் மூலம் எவ்வாறான இலக்குகளை ஹமாசினால் அடையமுடியும் என்பது கேள்விக் குறியாகத் தான் இருக்கிறது.

இவை எவ்வாறிருப்பினும், துன்பங்களை எதிர்கொள்பவர்கள் காஸாவில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் தான். அவர்கள் எங்கும் தப்பிச் செல்ல முடியாதவாறு மேற்கொள்ளப்படும் மூர்க்கத்தனமான விமானத் தாக்குதல்கள், ஆய்வாளர்களின் கூற்றுப்படி விரைவில் இஸ்ரேல் தொடுக்கப்போகும் தரைவழித்தாக்குதல் போன்றவற்றுக்கு முகம் கொடுப்பது இந்த அப்பாவிப் பொதுமக்கள் தான். அதே வேளை இஸ்ரேலைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்களும் துன்புறுகின்றார்கள். கொல்லப்பட்ட தமது உறவுகளுக்காகக் கண்ணீர் சிந்தும் அந்தப் பொதுமக்கள் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைக் கவலையோடு தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே ஹமாஸ் அண்மையில் மேற்கொண்ட அதிரடித்தாக்குதல் இறுதியில் ஒரு மூலோபாய இழப்பாக மாறுமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**நன்றி: அல்ஜஸீரா**

## இந்தியா மேற்... தொடர்ச்சி ...

வந்த இந்திய படையினர்அப்பாவி தமிழ் மக்கள் மீது வன்முறைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்திய இராணுவத்தின் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு மற்றும் எறிகணை வீச்சக்களால் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டனர். இந்த பகு கொலைகளில் முக்கியமானது கொக்குவில் பிரம் படி வீதி படுகொலை.

வீடுகளில் இருந்த அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், வீதிகளில் இழுத்து வரப்பட்டு போர் டாங்கிகளால் ஏற்றியும் கொல்லப்பட்டிருந்தனர். இந்திய இராணுவம் மேற்கொண்ட இந்த தாக்குதல்களில் தமிழீழம் எங்கும் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

## ஐ.நாவை வெளி ... தொடர்ச்சி ...

கலந்து கொள்வதையும் அவர் தடுத்துள்ளார். இவரின் நடவடிக்கை கள் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பை எற்படுத்தியள்ளன என நைகரின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் இராணுவப் புரட்சி மூலம் அங்கு ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருந்தது. ஆட்சியை கைப்பற்றிய புதிய அரசு பிரான்ஸ் படையினரை அங்கிருந்து வெளியேற்றியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஒரு மாதத்திற்கு ... தொடர்ச்சி ...

பொருளாதாரம் 25.46 றில்லியன் டொலர்களாகும். அதாவது இந்த கடன் தொகையை எட்டவேனுமெனில் பொருளாதாரம் 33.5 விகிதம் வளரவேண்டும்.

அமெரிக்காவின் இந்த நிலை உலக நாடுகளின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கைக்கு ... தொடர்ச்சி ...

மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அவை எட்டப் பட்டதும் எதிர்வரும் சில நாட்களில் நிதி இலங்கைக்கு வழங்கப் படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கை யின் பொருளாதார நெருக்கடிகளை குறைக்கும் முகமாக கடன் மறுசீரமைப்பை வழங்குவதற்கு சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த வங்கி 4.2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடன் தவணையை மறுசீரமைத்துக்கொடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கையின் நிதி அமைச்சு கடந்த புதன்கிழமை (11) தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த முடிவு மிகப்பெரும் முன்னேற்றம், இந்த நடவடிக்கை மூலம் இலங்கை அனைத்துலக நாணயநிதியத்தின் இரண்டாவது தவணைப் பணமான 334 மில்லியன் டொலர்களை பெறமுடியும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இந்திய வங்கி ... தொடர்ச்சி ...

குடும்ப உறுப்பினர்களினுடையது என விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களே பணத்தை திருடியுள்ளனர். செல்லிட தொலைபேசிகளில் தரையிறக்கப்படும் அப்ஸ் என்ற மென்பொருட்களை வாடிக்கையாளர்கள் தரையிறக்கம் செய்து தமது தகவல்களை அதில் பதிய வேண்டும் என கூறி அவர்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளது.

ஆறு வாடிக்கையாளர்களின் கணக்கில் இருந்து 110,000 ரூபாய்களும், ஒரு வாடிக்கையாளரின் கணக்கில் இருந்து 170,000 ரூபாய்களும், திருடப்பட்டுள்ளது. ஒரு முகவர் 390,000 ரூபாய்கள் வரை திருடியுள்ளார்.

இந்த திருட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உடனடியாக பணத்தை மீட்டு வாடிக்கையாளர்களின் கணக்கில் வைப்பிலிடுமாறு வங்கியின் தலைமையகம் வங்கிக்கு உத்தரவிட்டுள்ளது.

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

அன்றாட வாழ்வாதாரமாக விவசாயம் மீன் பிடியை நிம்மதியாக செய்து வாழ வேண்டும் அவர்களது காணிக்குள் சுதந்திரமாக பயிர்களை செய்து வாழ வேண்டும் எந்த தடையோ தொல்பொருள் திணைக்களத்தின் தலையீடோ பௌத்த மதஸ்தலங்களை அமைப்பதோ, புத்தர் சிலை வைப்பதோ என்ற பிரச்சினை வராமல் நிம்மதியாக வாழ வழிவிட்டுக் கொடுக்க வேண்டும்.

தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிப்பதை நிறுத்த வேண்டும் இதற்கான நிலையான தீர்வினை உரிய தரப்புக்கள் முன்வைக்க வேண்டும் என மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •